பக்கங்கள்: பதினான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 03 புதன்கிழமை (16-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:141

# பயங்கரவாதத்திலிருந்து முற்றாக விலகவேண்டும்

## புலிகளுக்கு அமெரிக்கா மீண்டும் நிபந்தனை

கொழும்பு,ஏப்.16

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து அமெரிக்கா இன்னமும் முடிவு செய்யவில்லை என்று அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சட் ஆர்மிடேஜ் தெரிவித்தார்.

புலிகள் பயங்கரவாதச் செயற்பாடுகளை நிபந்தனைகளின்றி முற்றாக கைவிடுவதாகச் சொல்லிலும், செயலிலும் பிரகடனப்படுத்தினால் அவர்கள் மீதான தடையை நீக்குவது குறித்து பரிசீலிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதம் டோக்கியோவில் இடம்பெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியாக, வாஷிங்ரனில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் கூறியதாவது:-

பெறுமதிமிக்க நிகழ்ச்சி ஒன்றில் நாம் இணைந்திருக்கிறோம். இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பொதுவான நோக்கத்தோடு இந்த மாநாடு நடைபெறுகிறது.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் முக்கிய கட்டத்தை அடைந்துள்ளன. இதற்கு சர்வதேச ரீதியில் உந்து சக்தி ஏற்படவேண்டும்.

முக்கியமான இலக்கு ஒன்றை எட்ட உலக நாடுகள் பங்காளிகளாக இணையமுடியும்.

(14.ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு இந்தியா 2,000 கோடி ரூபா உதவி

## வாஷிங்ரனில் அறிவிப்பு

வாஷிங்ரன்,ஏப்.16

உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் புனரமைப்புப் பணிக்காக கடனுதவி உட்பட மொத்தம் 2,000 கோடி ரூபா அளவுக்கு உதவி செய்ய இந்தியா முன்வந்துள்ளது.

அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் லலித் மான் சிங் இதை வாஷிங்ரனில் அறிவித்தார்.

வாஷிங்ரனில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முந்திய முன் ஆயத்த கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இந்தியத் தூதர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அந்நாட்டு அரசு மேற்கொண்டுள்ள அமைதிப் பேச்சுக்கு இந்தியா பூரண ஆதரவு தருகிறது.

அமைதிப் பேச்சின் முன்னேற்றம் குறித்து இலங்கையின் அனைத்து தரப்பினரும் எங்களுக்கு அவ்வப்போது தெரிவித்து வருகின்றனர்.

இலங்கையில் அமைதி ஏற்படுத்துவது தொடர்பான இந்தக் கருத்தரங்கில் பங்கேற்பதில் இந்தியா பெரிதும மகிழ்ச்சியடைகிறது.

- இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ)

# அவசர மனிதாபிமானப் பணிகளுக்காக குடாநாட்டில் 45 திட்டங்கள் சிபாரிசு

## 107 கோடி ரூபா செலவாகும் என்று மாவட்டத் துணைக் குழு மதிப்பீடு

யாழ்ப்பாணம்,ஏப்ரல்16

**குடாநாட்டில் அவசர மனிதாபிமானப் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காகப் பத்துத்துறைகளில் 45 திட்டங்கள் சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சுமார் நூற்று ஏழு கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கத்தின்படி அமைக்கப்பட்ட உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உபகுழுவின் (சிரான்) யாழ்.மாவட்ட துணைக்குழு இந்த 45 திட்டங்களையும் சிபாரிசு செய்திருக்கின்றது.

எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள 'சிரான்' கூட்டத்தில் இத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்படும். அங்கு இறுதிமுடிவு எடுக்கப்பட்டதும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் அவை இடம்பெறும்.

'சிரான்' துணைக் குழுவின் கூட்டம் யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற சமயம் இத்திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

துணைக் குழுவில் அரசு சார்பில் இடம்பெற்றுள்ள பிரதிநிதிகளான அரச

(14ஆம் பக்கம் பார்க்க)

## உளவுப் பிரிவின் உறுப்பினர் மட்டக்களப்பில் சுடப்பட்டார்!

### சந்தேகத்தின் பேரில் மூவர் கைது

மட்டக்களப்பு,ஏப்.16

மட்டக்களப்பு நகரப் பகுதியிலே- மத்திய வீதியில் - நேற்றுக்காலை 7.55 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் நடத்திய துப்பாக்கித் தாக்குதலில் இராணுவ உளவுப் பிரிவில் பணியாற்றி வரும் வரதன் குழு உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இராணுவத்தின் உளவுப் பிரிவாக செயற்படும் வரதன்குழுவின் உறுப்பினர்கள் இருவர் மத்திய வீதியில் சென்றுகொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிவிட்டனர்.

பரமானந்தம் ரவிக்குமார் என்றவர் தன் குழு உறுப்பினர் தலையிலும் தோளிலும் பலத்த காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவருடன் வந்த மற்றைய உறுப்பினர் ஓடித்தப்பி விட்டார்.

ரவிக்குமார் பின்னர் அவசர சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டு

(14.ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர், கொழும்புத்துறையில் மாதிரி வீடமைப்புத் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

கொழும்புத்துறை மற்றும் குருநகர் பிரதேசங்களில் சகல வசதிகளும் கொண்ட மாதிரிக் குடியிருப்புக் கிராமம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

'சிரான்' அமைப்பின் யாழ்.மாவட்ட துணைக்குழுவின் கூட்டம் யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மாதிரி கிராமம் அமைப்பது பற்றி ஆராயப்பட்டது.

வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான பணிகளுக்கான செயலகத்தின் (சிரான்) அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ள இந்த மாதிரிக் குடியிருப்பு கிராமத்தில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீளக் குடியமர்வோருக்கும், சொந்த இடங்களில் நிரந்தர குடியிருப்பு வசதிகள் இன்றி இருக்கும் குடும்பங்களுக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

குருநகர்ப்பகுதியில் இருநூறு குடும்பங்களுக்கும் கொழும்புத்துறைப் பகுதியில் 80 குடும்பங்களுக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5)

## இலங்கைக்கு மூன்று ஆண்டுகளுக்கு வருடாந்தம் 100 கோடி டொலர் தேவை

### வாஷிங்ரன் கூட்டத்தில் அமைச்சர் மொறகொட வலியுறுத்தல்

வாஷிங்ரன்,ஏப்.16

இலங்கையின் புனர்நிமாண அபிவிருத்திப் பணிகளுக்கு வருடாந்தம் 100 கோடி டொலர்கள் வழங்கப்பட வேண்டும். இத்தொகை மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாக கிடைக்க வேண்டுமென வாஷிங்ரனில் கடந்த திங்களன்று நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பூர்வாங்கக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட இலங்கைக்கு இவ்வாறு உதவி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இரண்டு தசாப்தங்களாகத் தொடர்ந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் மாத்திரமன்றி முழு இலங்கையினதும் பொருளாதார அபிவிருத்திக்காக அரசு வரைந்துள்ள திட்டத்தை அமைச்சர் மொறகொட இக்கூட்டத்தில் வெளி

(14.ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டணி உறுப்பினர்கள் சந்திப்பு

கிளிநொச்சி,ஏப்.16

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

முன்னர் கடந்த 10 ஆம் திகதி இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்று பிரதமரைச் சந்திக்கவிருந்ததால், அது நடைபெறவில்லை.

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள சந்திப்புக்கு கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியைத் தவிர ஏனையோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக தெரியவந்தது.

### ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களால்

# பெரும் அவமதிப்பாம்! பிரதமர் வரும் வரை மூதூரிலிருந்து நகரமாட்டாராம் ஹக்கீம்!!

## மஹ்ரூப் எம்.பி. தெரிவித்த கருத்தால் முறுகல்

கொழும்பு,ஏப்.16

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அரசின் பங்காளியான முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையிலான முறுகல் நிலை முற்றி, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை நேற்று மூதூரில் நேரடி நடவடிக்கையில் இறங்கவைத்தது.

மூதூர்ச் சம்பவங்கள் தொடர்பாக அக்கரைச் சேனை பெரிய பள்ளி வாசலில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஐ.தே.க. எம்.பி. மஹ்ரூப் பேசுகையில், சம்பவங்களுக்கெல்லாம் முஸ்லிம் காங்கிரஸே பதில் சொல்ல வேண்டும். வேறு எந்த அமைச்சரோ அல்ல ரவூப் ஹக்கீம் தான் பதவி விலக வேண்டும் என்று கூறியதால் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஆவேசம் அடைந்தார்கள்.

இது பெரும் அவமதிப்பு. பிரதமர் நேரில் வந்து சமாதானம் செய்யும் வரை தலைவர் மூதூரைவிட்டு நகரக் கூடாது என்று அன்புக் கட்டளையிட்டனர். ஹக்கீம் அதை ஏற்று பிரதமர் வரும் வரை எங்கும் நகருவதில்லை என்று அங்கேயே தங்கிவிட்டார்.

மூதூரில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டதையடுத்து ஓர் இளம் தாய் தனது உயிரை மாய்த்துக்கொண்டார். அதனால், மூதூரில் பதற்றம் ஏற்பட்டது. அதனாலேயே

(14.ஆம் பக்கம் பார்க்க)

# 'சிரான்' திட்டங்களைக் கண்காணிக்க யாழ்.செயலகத்தில் அலுவலகம் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஏப்.16

உடனடி மற்றும் அவசர மனிதாபிமான பணிகளுக்கான செயலகம் (சிரான்) யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளும் திட்டங்களை அவதானிப்பதற்காக கண்காணிப்பு அலுவலகம் ஒன்று அடுத்த வாரம் முதல் யாழ். செயலகத்தில் இயங்கவுள்ளது.

நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாவட்டத் தேவைகளை ஆராயும் சிரான் துணைக் குழுவின் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்.மாவட்டத்திற்கான திட்டங்களை இனங்காணல், அவற்றை ஒரு முகப்படுத்தல், திட்டமுன்மொழிவுகளைத் தயாரித்தல், திட்டங்கள் குறித்த இலக்கை அடைவதற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குதல், அதன செயற்பாட்டுத் தரத்தை உயர்த்துதல் ஆகியனவையே இந்த அலுவலகத்தின் முக்கிய பணியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த அலுவலகத்தில் அரசுத்தரப்பு மற்றும் 'சிரான்' அமைப்புப் பிரதிநிதிகள் பணிபுரிவர். பொதுமக்களும் பத்திரிகையாளர்களும் தமக்கு வேண்டிய தரவுகளை இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# காணாமற்போனோர் குறித்து விசாரணை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

குடாநாட்டில் கடந்த 96 ஆம், 97 ஆம் ஆண்டுகாலப் பகுதிகளில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் நேற்று மீண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் ஆரம்பமாகின.

இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கென மனித உரிமை ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையிலான நான்குபேர் கொண்ட குழுவே விசாரணைகளை நடத்தியது.

நேற்றைய விசாரணைகளில் காணாமற்போனோரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் பலர் கலந்து கொண்டு தமது உறவுகள் காணாமற்போனமை தொடர்பான விவரங்களைத் தெரிவித்தனர்.

இன்று இந்த விசாரணைகள் சுன்னாகத்தில் அமைந்துள்ள உடுவில் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதுடன், நாளை மீண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

இக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் ஐந்தாவது தடவையாக விசாரணை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10-5)

# மது விற்பனை நிலையங்களில் பொலீஸார் சோதனை

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அனுமதியின்றி மதுபானம் விற்பனை செய்யும் இடங்கள் மீது யாழ்.பொலீஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சில நாள்களாக பொலீஸார் நடத்தி வரும் இந்த சோதனை நடவடிக்கைகளின்போது சட்ட விரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்டிருந்த மதுபான நிலைய உரிமையாளர்கள் சிலர் பிடிபட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு சமீபமாக கண்டிவீதியில் இயங்கிவரும் பிரபல உணவு விடுதி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது 30 போத்தல் சாராயம் மீட்கப்பட்டது.

மானிப்பாய் பகுதியிலுள்ள சாராய விற்பனை நிலையம் ஒன்று லைசென்ஸ் இல்லாமல் இயங்கி வந்தமை கண்டு பிடிக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. அங்கிருந்த மதுபான வகைகளும் பொலீஸாரால் எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ-4)

## தென்மராட்சியில்

# ஐ.நா. தூதரக உதவியுடன் சுயதொழில் முயற்சிக் கடன்

தென்மராட்சி,ஏப்.16

தென்மராட்சி பிரதேசத்தில் சுய தொழில் முயற்சியில் ஈடுபடவுள்ளோருக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் சுய தொழில் முயற்சிக் கடன்களை விரைவில் வழங்கவுள்ளது.

தென்மராட்சி ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊடாக வழங்கப்படவுள்ள இக் கடன்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளை தூதரக உயர் அதிகாரிகள் நாளை வியாழக்கிழமை சந்திக்கவுள்ளனர்.

நாளை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் இச்சந்திப்பு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# 'மனித குளோனிங்' முறை; இலங்கை அனுமதிக்காது!

கொழும்பு,ஏப்.16

இலங்கையில் குளோனிங் முறையில் குழந்தைகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதி வழங்காது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் மனித குளோனிங் முறை எவராலும் அனுமதிக்கப்படமாட்டாது. உலகில் பல நாடுகளிலும் நடைமுறையில் இருப்பது போன்றதாக இத்தடை அமையும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

'இலங்கையில் குளோனிங் நிலையம் ஒன்றை உருவாக்கும் பொருட்டு கடந்த வாரம் சர்வதேச குளோனிங் அமைப்பின் குழு ஒன்று இலங்கை வந்திருந்தது. இந்தக் குழுவினர் மூன்று குழந்தைகளைத் தாம் குளோனிங் முறையில் உருவாக்கி இருப்பதாக தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவின் முயற்சிகள் சாத்தியமற்றவை எனவும் அத்தகைய திட்டம் எதுவும் அரசிற்குக் கிடையாது எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ-12)

# வலந்தலைச் சந்தி அருகே உதவி அரச அதிபர் பணிமனை

## ஒரு கோடி 20 லட்சம் ரூபா செலவில்

யாழ்ப்பாணம்,ஏப்.16

காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனைக்கான புதிய கட்டடம் ஒன்று வெகுவிரைவில் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டட அமைப்புக்கென ஒரு கோடி இருபது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த உதவி அரச அதிபர் பணிமனைக் கட்டடத்தை அமைப்பதற்கென காரைநகர் வலந்தலைச் சந்திப்பகுதியில் புதிய காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு கட்டடம் வெகுவிரைவில் கட்டி முடிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

காரைநகர் பகுதியில் பொதுச் சந்தை ஒன்றை அமைக்கும் முயற்சியிலும் தாம் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-8)

# கண்ணி அகற்றாத பகுதியிலேயே மிதி வெடிச் சம்பவம் இடம்பெற்றது

## 'ஹலோ ட்ரஸ்ட்' அமைப்பு விளக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

கொக்குவில் கலட்டிப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற மிதிவெடி வெடிப்புச் சம்பவம் தொடர்பாக அந்தப் பிரதேசத்தில் கண்ணிகளை அகற்றும் பணியை மேற்கொண்டு வரும் 'ஹலோ ட்ரஸ்ட்' (HALO TRUST) அமைப்பு விளக்க அறிக்கை ஒன்றை உதயனுக்கு அனுப்பிவைத்திருக்கிறது.

இந்த மிதிவெடிச் சம்பவத்தில் கட்டடத் தொழிலாளி ஒருவர் காயமடைந்திருந்தார். இதுதொடர்பான செய்தி ஒன்று கடந்த 12ஆம் திகதிய உதயனில் வெளியாகி இருந்தது.

அந்தச் செய்தியில் குறிப்பிட்டிருப்பது போன்று மிதிவெடி வெடித்த பகுதி கண்ணிகள் அகற்றப்பட்டு, துப்புரவு செய்யப்பட்டு, மிதிவெடி அற்ற பகுதி என்று உறுதிப்படுத்தப்பட்ட இடம் அல்ல என்று 'ஹலோ ட்ரஸ்ட்' அமைப்பு விளக்கம் அளித்திருக்கிறது.

'இச்சம்பவம் எமது நிறுவனத்தால் நடுத்தர முதன்மை வாய்ந்த மிதிவெடிகள் உள்ள இடமாக (Medium priority minefield) அறிவிக்கப்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் நடைபெற்ற இடத்தை எமது நிறுவனம் மிதிவெடி அகற்றப்பட்ட இடமாக அறிவிக்கவில்லை. அத்துடன் எமது நிறுவனத்தால் மிதிவெடி அபாயம் என பதாதைகள் பொருத்தப்பட்ட இடத்திலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது' - என்று 'ஹலோ ட்ரஸ்ட்' தெரிவித்திருக்கிறது.

கலட்டிப் பகுதியில் கண்ணி அகற்றப்பட்ட பிரதேசத்தின் தெளிவான வரை படங்களையும் அந்த அமைப்பு உதயனுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. (ஐ)

## நீதிமன்ற வளவில் படையினர் துப்புரவுப் பணி

தென்மராட்சி,ஏப்.16

சாவகச்சேரி நீதிமன்றக் கட்டட வளவு படையினரால் நேற்று முதல் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

நகரப் பகுதியில் சேதமடைந்த நிலையில் காணப்படும் நீதிமன்ற கட்டட வளவில் முகாம் அமைப்பதற்காகவே அதனை படையினர் துப்புரவு செய்து வருவதாக கூறப்படுகிறது.

இந்த வளவுக்கு அண்மையில் உள்ள நகரசபை விளையாட்டு மைதானப் பகுதியில் படையினர் முகாம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## சுகாதார கருத்தரங்கு

'ஆஸ்துமா' நோயும் அதற்கான தீர்வுகளும்' என்னும் தலைப்பிலான சுகாதாரக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாய மருத்துவத்துறையைச் சேர்ந்த செல்வி இ.காயத்திரி இக்கருத்தரங்கில் விளக்கவுரை வழங்கவுள்ளார்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரை இக்கருத்தரங்கில கலந்துகொண்டு பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-8-11)

## ஆங்கில ஆசிரியர் விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள புதிய உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ஒ-10)

## பரிசளிப்பு விழா!

யாழ்ப்பாணம்,ஏப்.16

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் முதலாம் தவணைக்கான பரிசளிப்பு விழாவும் கணிப்பீட்டறிக்கை வழங்கும் நிகழ்ச்சியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அக்கடமியின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா [illegible]ந்துகொண்டு பரிசில்களை வழங்குவார். (ஐ-3)

# 21ஆம் திகதி முதல் மீண்டும் சாரதி 'லைசன்ஸ்' சோதனை

## கைதாவோர் நீதிமன்றங்களுக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.16

அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவோரை எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்யப் பொலீஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதனையடுத்து நேற்று யாழ்.செயலகத்தில் உள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் சனக் கூட்டம் அலைமோதியதைக் காணக் கூடியதாக இருந்தது.

சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பம் செய்வதற்கான படிவங்களைப் பெற்றுக்கொள்வதிலும் ஏற்கனவே பெற்றுக்கொண்ட விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து மீண்டும் சமர்ப்பிப்பதற்காகவும் பெரும் எண்ணிக்கையானோர் அங்கு திரண்டனர்.

கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.நீதிமன்ற வளாகத்தில் நீதிவான்களுக்கும் பொலீஸ் அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போது சாரதி அனுமதிப் பத்திரப் பரிசோதனை தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை -

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி வரையும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான எழுத்துப் பரீட்சையும் செயன்முறைப் பரீட்சையும் நடைபெறவுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## வீட்டு மலசல கூட குழியில் சிசுவின் சடலம்! இளம் பெண் விசாரணை

மட்டக்களப்பு, புதூர் பகுதியில் வீடொன்றில் உள்ள மலசல கூட குழியிலிருந்து சிசுவின் சடலமொன்று பொலீஸாரால் கடந்த ஞாயிறன்று மீட்கப்பட்டது. சட்ட வைத்திய அதிகாரி இப்பகுதியில் இன்மையால் விசாரணை தாமதமாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக திருக்கோயில் பகுதியில் வசிக்கும் இளம் பெண்ணொருவர் பொலீஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## திருமலை ஈ.பி.டி.பி.அலுவலகம் கைக்குண்டு வீச்சு!

திருமலையிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது. ஆயினும், இதனால் யாரும் பாதிக்கப்படவில்லை. நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அந்த அலுவலகம் மீது கைக்குண்டை எறிந்து விட்டுச் சென்றனர் என பொலீஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புத்தாண்டில் வன்முறை, வாகன விபத்துக்களில் 19 பேர் பலி; 732 பேர் வைத்தியசாலைகளில்!

கொழும்பு,ஏப்.16

புதுவருடத் தினத்தன்று நாடு முழுவதும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள், வாகன விபத்துக்கள் ஆகியவற்றில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இம்முறை பட்டாசுகளினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை குறைவென கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதுவருட தினமான நேற்றுமுன்தினம் கொழும்பில் 9 பேர் வன்முறை, வாகன விபத்துக்கள் ஆகியவற்றில் உயிரிழந்துள்ளனர். நாடு முழுவதிலும் 732 பேர் இச்சம்பவங்களினால் காயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் 241 பேர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## தமிழ்ப் புறக்கணிப்பை பொறுக்க முடியாமல்

# நுவரெலியா பெயர்ப் பலகைகளில் தமிழையும் பொறித்த பிரதியமைச்சர்!

கொழும்பு,ஏப்.16

பெரும்பான்மையாக தமிழ் பேசும் மக்கள் வாழும் நுவரெலியா மாவட்டத்தில் பெயர்ப் பலகைகளில் தமிழ் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனால், பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் நேற்றுமுன்தினம் நுவரெலியா நகரிலுள்ள சில பெயர்ப்பலகைகளில் பெயர்களைத் தமிழில் எழுதினார்.

பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் பெயிண்ட் வாளிகளுடன் இரண்டு, மூன்று பேர் சகிதம் நுவரெலியா நகரிலுள்ள சில பெயர்ப்பலகைகளில் தமிழ் வாசகங்களை எழுதச் செய்தார்.

சுற்றுலாவுக்கு பெயர் பெற்ற நுவரெலியாவில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஆனால், மாநகர சபை, நுவரெலியா பொலீஸ் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மாத்திரமே எழுதப்பட்டிருக்கின்றன.

தமிழ்மொழியும் அரச கரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, பெயர்ப்பலகைகளில் தமிழ் மொழியும் இடம்பெறவேண்டுமெனவும் பிரதியமைச்சர் மாநகரசபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார். (ஐ)

# மூதூரில் நேற்று பதற்றம்! கடைகளைப் பூட்டி ஹர்த்தால்

மூதூரில் இனம் தெரியாதோரால் கடந்த 31 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட இரு முஸ்லிம் இளைஞர்களில் ஒருவரது தாயார் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரியவருகிறது. இதையடுத்து மூதூரில் நேற்று பதற்றம் நிலவியது.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம்.அஸ்வர், பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா, தீசர் தௌபீக் எம்பி ஆகியோர் நேற்றுக்காலை ஹெலிகொப்டர் மூலம் மூதூர் விரைந்தனர். மூதூரில் நேற்று கடைகள் அனைத்தும் மூடப்பட்டு இருந்தன. நகரில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கொழும்பிலிருந்து சென்ற அமைச்சர்கள் நேற்று மாலை மூதூர் பள்ளிவாசலில் விசேட கூட்டமொன்றை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# ஈராக்கில் போர் முடிந்ததை அடுத்து இடைக்கால அரசு பற்றி பேச்சுக்கள்

பக்தாத்,ஏப்.16

ஈராக்கில் அமெரிக்கா நடத்தி வரும் போர் 27 நாள்களின் பின்னர் முடிவுக்கு வந்துள்ளதைத் தொடர்ந்து அங்கு இடைக்கால அரசு ஒன்றை அமைப்பது பற்றிய பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் அந்தப் பேச்சுக்களில் பெரும் இழுபறி நிலை தோன்றியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஈராக்கில் இடைக்கால அரசை அமைத்து அதனை மீளக்கட்டியெழுப்புவது குறித்த முக்கிய கூட்டம் நஸீரியாவில் நேற்று ஆரம்பமானது. இதில் ஷியா, சுனி, குர்திஷ் மற்றும் பழங்குடி மக்களின் பிரதிநிதிகள் என 60இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதற்கு மாறாக பெரும்பாலான தலைவர்கள் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர்.

அமெரிக்காவுக்கு மிக நெருக்கமானவரும் அனேகமாக ஈராக்கின் அடுத்த அதிபராக வரக்கூடியவர் என்று கருதப்படுபவருமான 'அஹமட் சலாமி'யும் இந்தக் கூட்டத்தைப் பகிஷ்கரித்துள்ளார். எனினும், தனது பிரதிநிதி ஒருவரை கூட்டத்துக்கு அனுப்பி உள்ளதாக அவர் கூறினார்.


ஈராக்கில் சதாம் ஆட்சியை அகற்றியதுடன் அமெரிக்கர்களின் பணி முடிந்துவிட்டது. தமது அரசியல் பற்றி ஈராக்கியர்களே முடிவு செய்யவேண்டும். அதில் அமெரிக்காவோ பிரிட்டனோ தலையிடக்கூடாது என்பது சலாமியின் நிலைப்பாடு.

உலக அரங்கில்

ஆனால், அமெரிக்கர்கள், ஈராக்கிய பழங்குடியினத் தலைவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே சலாமிக்குச் சீற்றத்தைக் கொடுத்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

ஈராக்கின் பெரும்பான்மையினரான ஷியா முஸ்லிம்களும் இந்தக் கூட்டத்தை புறக்கணித்துள்ளனர்.

ஈராக்கிய இஸ்லாமிய புரட்சிச் சபையின் அதிகாரியான மோசெல் ஹக்கீம், இந்தக் கூட்டத்தில் இருந்து அதிகம் எதிர்பார்க்கமுடியாது என்று கூறினார். ஆனால், அமெரிக்காவுக்கு ஆதரவான ஈராக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்தவர்கள் இந்தக் கூட்டம் எதிர்கால அரசியல் நிலைக்கு நன்மை பயக்கக்கூடியது என்றனர்.



"ஒரு புதிய அரசை ஈராக்கில் உருவாக்குவது குறித்து இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படாவிட்டாலும், ஈராக்கின் வருங்காலத்தைத் தீர்மானிப்பதற்கான வழிமுறைகள் பற்றி இந்தக் கூட்டம் ஆராயும்" - என்றார் அந்தக் கட்சியைச் சேர்ந்த கோடோ சடாலா. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

ஓய்வுபெற்ற அமெரிக்கப் படை அதிகாரியான ஜே கார்னரே ஈராக்கில் அமையவுள்ள இடைக்கால அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்பார் என்று தெரிகின்றது. அவர் இது குறித்துத் தெரிவித்தபோது, ஈராக்கில் ஆட்சி மாற்றத்தை படிப்படியாகச் செய்ய இருப்பதாகக் கூறினார்.

இடைக்கால அரசு அமைக்கப்படுவதில், ஒவ்வொரு நாள்களும் பின் தள்ளப்பட்டுக் கொண்டு செல்வது நிரப்பமுடியாத இடைவெளி ஒன்றை ஏற்படுத்திவிடக்கூடும் என்றும் அவர் சொன்னார்.

அதேசமயம் -

புதிய இடைக்கால அரசு அமைக்கும் ஏற்பாடு பற்றி பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி டிம்கிராஸ் கூறும்போது, "நாங்கள் இங்கு நீண்ட நாள் இருப்பதை ஈராக்கியர்கள் விரும்பவில்லை. முடிந்த அளவுக்கு விரைவில் இங்கிருந்து திரும்பிச் செல்லவே நாங்களும் விரும்புகின்றோம்" - என்றார்.


"ஈராக்கில் நிரந்தரமான ஓர் அரசு அமைய குறைந்தது இன்னும் 6 மாதங்களுக்கு மேல் ஆகலாம். ஜனநாயக ரீதியில் தேர்தல் நடைபெற மேலும் சில காலம் பிடிக்கும்" என்றும் அவர் சொன்னார்.

(ம)



# சிரியாவை மிரட்டுகிறது அமெரிக்கா!





வாஷிங்ரன்,ஏப்.16

ஈராக் தலைவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது, இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்ய முயற்சிப்பது, தீவிரவாதத்துக்கு ஆதரவு தெரிவிப்பது போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவதால் சிரியா மீது பொருளாதாரத் தடை மற்றும் தூதரக ரீதியான தடைகளை விதிக்கப்போவதாக அமெரிக்கா மிரட்டிவருகின்றது.

அமெரிக்கப் படைகள் பக்தாத்தை கைப்பற்றியதும் அதிபர் சதாமின் குடும்பத்தினரில் சிலரும், தேடப்பட்டு வரும் ஈராக்கியர்கள் சிலரும் எல்லை தாண்டி சிரியாவுக்குள் நுழைந்துவிட்டதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டுகின்றது.

சிரியத் தலைவர் நிலைமையை சரியாகப் புரிந்துகொள்ளாமல் நடக்கின்றார். ஒரு நாட்டின் தலைவராக அவர் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும் என்றார் அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகைப் பேச்சாளர்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் இது குறித்துத் தெரிவிக்கையில், "ஈராக்கியர்கள் சிலர் சிரியாவுக்குள் புகுந்துள்ளதை எமது புலனாய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். அவர்கள் அங்கு தங்கியிருப்பதற்காக அல்லது அங்கிருந்து வேறு இடத்துக்குச் செல்வதற்கு சிரியா உதவிகளைச் செய்கிறது" - என்றார். ஆனால், சிரியாவுக்குச் சென்ற ஈராக்கியர்கள் யார் என்பதையோ, அவர்கள் எப்போது அங்கு சென்றார்கள் என்பதையோ அமெரிக்கா தெளிவுபடுத்தவில்லை.

அதேசமயம், சிரியர்களையும் ஏனைய அரபுக்களையும் எல்லை தாண்டி ஈராக்குக்குள் தொடர்ந்தும் சிரியா அனுப்பி வருகின்றது என்றும் அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

"எல்லை தாண்டி நுழைபவர்களில் பலர் ஆயுததாரிகளும் தற்கொலையாளிகளுமாவர். அவர்களால் அமெரிக்கர்கள் கொல்லப்பட்டால், அதற்குரிய பயனை சிரியா அனுபவிக்கவேண்டி வரும்" - என்று எச்சரிக்கை செய்தார் டொனால்ட் ரம்ஸ்பீல்ட்.

எனினும், தற்போதைக்கு அமெரிக்கா, சிரியா மீது உடனடி இராணுவ நடவடிக்கை எதனையும் எடுக்காது என்றே ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர். அதற்குப் பதிலாக சிரியா மீது இராஜீய ரீதியான அழுத்தங்களையே அமெரிக்கா பிரயோகிக்கும் என்று நம்பப்படுகின்றது.

அதனால்தான் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல், சிரியா மீது இராஜீய ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான தடைகளைப் ஏற்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்தார்.

அவ்வாறு நிகழ்ந்தால், சிரியப் பொருள்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாவது நிறுத்தப்படும். அமெரிக்க நிபுணர்கள் சிரியா செல்வது தடைசெய்யப்படும். அமெரிக்க வர்த்தகர்கள் சிரியாவில் செயற்படமுடியாத நிலை தோன்றும். சிரியா-அமெரிக்கா இடையிலான விமானப் போக்குவரத்துக்கள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டிய நிலையும் தோன்றும் - என்று தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய தடைகள் அறிமுகப்படுத்தப்பட்டால் சிரியாவின் பொருளாதாரம் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கவேண்டி வரும் என்றும் கூறப்படுகின்றது.

(ம)


# பாடசாலையினுள் புகுந்து ஆயுததாரி துப்பாக்கிச் சூடு; மாணவன் பலி!

## அமெரிக்காவில் சம்பவம்

நியூயோர்க்,ஏப்.16

அமெரிக்காவின் நியூ ஓர்லென்ஸ் மாகாணத்தில் உள்ள கல்லூரி ஒன்றினுள் நுழைந்து ஆயுததாரி ஒருவர் நடத்திய தாக்குதலில் மாணவர் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 3 மாணவிகள் காயமடைந்தனர்.

திங்களன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலீஸார் தெரிவித்தனர். தாக்குதல் நடத்திய தாக்குதலாளி 'ஏ.கே.-47' ரக துப்பாக்கியைப் பயன்படுத்தியதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.



இந்தச் சம்பவம் தொடர்பாக 3 இளைஞர்களை நியூ ஓர்லென்ஸ் பொலீஸார் கைதுசெய்துள்ளனர். அவர்கள் அனைவரும் 15 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் காவலையும் மீறி திடீரென நால்வர் உள்ளே நுழைந்துள்ளனர். அவர்களில் துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் கண்மூடித்தனமாக மாணவர்களை நோக்கி தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதில், தலையிலும் உடம்பிலும் துப்பாக்கிச் சூடுபட்ட வில்லியம்ஸ் என்ற மாணவன் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாக பாடசாலை ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு தப்பி ஓட முயன்ற 3 மாணவிகளும் சம்பவத்தில் காயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை மிகமோசமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே நடந்த மோதல் ஒன்றின் தொடர்ச்சியாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பாடசாலை நிர்வாகம் நம்புகின்றது.

பொலீஸார் தீவிரமான விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(ம)

# சிரியா மறுப்பு!

டமாஸ்கஸ்,ஏப்.16

இரசாயன ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு முயல்கின்றார்கள் என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டை சிரியா மறுத்துள்ளது.

"இஸ்ரேல் அத்தகைய இரசாயன, உயிரியல் ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் என்பதையும் அதைக் கொண்டு அவர்கள் தமது அண்டை நாடுகளை அச்சுறுத்தி வருகின்றார்கள் என்பதையும் நாம் அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றோம்" - என்று சிரிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

300இற்கும் மேற்பட்ட அணுவாயுதங்களை இஸ்ரேலியர்கள் வைத்திருக்கின்றார்கள். ஆனால், அமெரிக்கர்கள் அதைப்பற்றி எதனையும் தெரிவிப்பதில்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமையன்று செய்தியாளர்களிடம் உரையாற்றிய அமெரிக்க அதிபர் புஷ், சிரியா இரசாயன ஆயுதங்களை வைத்திருப்பதாகவும் வாஷிங்ரனுடன் அவர்கள் ஒத்துழைக்க மறுத்து வருவதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே சிரிய வெளிவிவகார அமைச்சு அறிக்கை விடுத்துள்ளது.

"போரால் பாதிக்கப்பட்ட ஈராக்கியர்களுக்கு உதவுவதே தமது நோக்கம். அது தவிர ஈராக்கிய அரசுக்கு உதவுவது தமது நோக்கமல்ல" - என்று சிரிய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினார்.

(ம)

# செஞ்சிலுவை சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.16

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் கீழே பெயர் குறிப்பிட்ட நபர்களைத் தொடர்புகொள்ளுமாறு அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

★ ஜெயசிங்கம் மரியநாயகி - (குரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை).

★ மணிமாறன் ரதிதேவி-(மே/பா. முத்துலிங்கம் நீர்வேலிச் சந்தி, பருத்தித்துறை வீதி, நீர்வேலி).

★ முத்துசாமி தமிழ்தாசன் - (மே/பா.எஸ்.பாக்கியராசா, 17/1, நாவலடி ஒழுங்கை, வண்ணார் பண்ணை)

★ இரத்தினவடிவேல் இராமநாதன்- (நெடியகாடு, வல்வெட்டித்துறை)

★ ஞானரத்தினம் கலைவாணி-(வாரிவளவு, காரைநகர்) (ஐ)


## உதயசூரியன் சனசமூக நிலையம்

### 40 ஆவது ஆண்டுவிழா - போட்டிகள்

* மென்பந்து கிரிக்கெட
(ஆறுபேர் கொண்ட 5 பந்துப் பரிமாற்றம்)
* சைக்கிள் ஓட்டம் *(50 Km)*
* மரதன் ஓட்டம் *(10 Km)*

விண்ணப்ப முடிவு திகதி - 20-04-03

போட்டிகள் 26,27.04.2003 தினங்களில் நடைபெறும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள்:

1) சிற்றி பெயின்ற் ஹவுஸ், சுன்னாகம்.
2) V.S.மருந்தகம், மானிப்பாய் வீதி, உடுவில்.

*விளம்பர அனுசரணை*

**சிற்றி பெயின்ற் ஹவுஸ்**

**Paint, Ceramic Ware, Iron, S - Lon Pipe, are Available here**

*No,63,K.K.S.ROAD, CHUNNAKAM.* (16728)



## SHOTOKAN KARATE ACADEMY

**Affiliated to: I.U.M.A - Colombo - J.D.K.A - Jaffna.**



| சென்செய் | சிகான் | சென்செய் |
|---|---|---|
| S.கிருபைராஜ் | D.அன்ரோடினேஸ் | T.துஷ்யானந் |
| (3ஆம் கறுப்புப்பட்டி) | (பிரதம ஆசிரியர்) | (3ஆம் கறுப்புப்பட்டி) |

S.K.A பிரதம ஆசிரியரும்,
பரீட்சகருமான Shihan D.அன்ரோடினேஸ் M.T.Sh (5th Dan)
அவர்களால் மேற்படி ஆசிரியர்கள்
தரமுயர்த்தப்பட்டமையையிட்டு வாழ்த்துகின்றோம்.

S.K.A. மாணவர்கள்.

புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

*மருதன்குளம் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (16790) *இல.9, முதலாம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம்.*


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| முற்றத்து நிலவாய் | | வானத்து இருளாய் |
|---|---|---|
| 24 - 10 - 1950 |  | 26 - 05 - 2002 |

அமரர்

### வைரவி சுபாஸ்

(16. 04. 2003)

*அன்பினை வளர்த்து மண்ணில் அறிவினில் உயர்ந்தோராகி*
*வன்பகை நீக்கிவாழ்ந்து மதிப்புற நல்வழி பேணிய – வுனை*
*கண்ணிமைக்கும் கடுதியில் கொன்றனரே கொடியோர்கள்*
*எண்ணியழு திளைத்தோம் இவ்வோராண்டில் நீயுமே விவ்விடர்*

- குடும்பத்தினர்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (16808)

## தேவார முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப பாராயணம் இன்று காலை 9மணியளவில் வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ஔ)

## கிளிநொச்சியில் விளையாட்டுத்துறை நடுவப்பணியகம்

கிளிநொச்சி,ஏப்.16

தமிழீழ விளையாட்டுத்துறையின் நடுவப்பணியகம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்டது.

இத்திறப்புவிழா நிகழ்வில் ரி.ரி.என் நிறுவன வெளிக்களப் பணிப்பாளர் நகுலன் ஈகச்சுடரை ஏற்றினார். தேசியக்கொடியை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

மாவீரர் கப்டன் காண்டீபனின் தந்தையார் பத்மநாதன் விளையாட்டுத் துறை நடுவப்பணியக அலுவலகத்தை நாடாவெட்டித் திறந்துவைத்தார். பெயர்ப்பலகையினை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் கனகராஜா திரைநீக்கம் செய்துவைத்தார். தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா சிறப்புரை நிகழ்த்தினார். (ஔ-4)

## சாவகச்சேரியில் வாகன சோதனை

சாவகச்சேரிப் பொலீஸாரினால் வாகன ஆவணங்களைப் பரிசீலிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரம், வாகன வரி, காப்புறுதி இல்லாத, தலைக்கவசம் அணியாத மோட்டார் சைக்கிளோட்டிகளுக்கு பொலீஸாரினால் உடனடி தண்டம் விதிக்கப்பட்டும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டும் வருவதாக பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜீ.ஜீ.விமலஸ்ரீ தெரிவித்தார். (ஔ-117)

## மலர் வெளியீடு

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு மலர் அறிமுக விழா இன்று கல்லூரி மண்டபத்தில் அதிபர் ந.சிவகடாட்சம தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம கலந்துகொள்வார். ஆய்வுரையை கலாநிதி க.குணராசா நிகழ்த்தவுள்ளார். மலரின் முதற்பிரதியை ரி.தர்மலிங்கம் பெற்றுக்கொள்வார். (ஔ-ரி)


**ஐடியல்**
சண்டிலிப்பாய்
**A/L 2005**
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:
18.04.2003
மாலை 4.00 மணி
(16813)



**PHYSICS**
நடைபெறவுள்ள A/L பௌதிகவியல் எதிர்பார்ப்பு மாதிரி வினாத்தாள்கள் வெளி வந்துவிட்டன.
*ஆக்கம்:* **K.Suresh**
கிடைக்கும் இடங்கள்
I.B.S.சுண்டுக்குளி, நல்லூர்.
T.P.0777 032667
(16803)


### வண்ணார்பண்ணை - காட்டுத்துறை அருள்மிகு பகவதி மாரி அம்மன் கோவில்

## அலங்கார உற்சவம் - 2003

மேற்படி ஆலய அலங்கார விஷேச உற்சவங்கள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

**17-04-2003 வியாழக்கிழமை**
மாலை 5.30 மணி - ஆரம்பம் - ஸ்நபன அபிஷேகம்
தொடர்ந்து பூசை - அம்பாள் வீதி உலா உற்சவம்.

**22-04-2003 செவ்வாய்க்கிழமை**
மாலை 6.00மணி-தண்டிகை உற்சவம்

**26-04-2003 - சனிக்கிழமை(10ஆம் நாள்)**
பகல் 11.00மணி - அஷ்டோத்தர சத சங்காபிஷேகம்,
மாலை 7.00மணி - அலங்கரிக்கப்பட்ட சிங்கவாகனத்தில் அம்பாள் திரு வீதி உலா வருதல் இடம்பெறும்.

(27400) - தேவஸ்தானம்.

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 06 - 10 - 1946 |  | 16 - 04 - 1997 |

### அமரர் கனகன் தங்கராசா

(நடத்துநர், இ.போ.ச)

ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
நினைவுகள் மட்டும் மறையவே மறையாது
என்றும் உங்கள் நினைவுகளோடு
வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்!

*வல்லை வீதி,*
*தொண்டைமானாறு.* (16806)

மனைவி, பிள்ளைகள், மருமகன், மாமன், மாமி, பேரன்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 30 - 11 - 1932 |  | 17 - 03 - 2003 |

### அமரர் சின்னத்தம்பி விக்னேஸ்வரன்

திதி - 16-04-2003

அச்செழுவைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட, அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் அனுதாபச்செய்தி அனுப்பியும், எமது துயரினைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (16.04.2003) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வி.சிவயோகம்,
*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.* (16770) குடும்பத்தினர்.

சிவமயம்



## சிவாச்சார்யாபிஷேக அழைப்பு

பேரன்புடையீர்,

மங்களகரமான சுபானு வருடம் சித்திரைத்திங்கள் 4ஆம் நாள் (17.04.2003) வியாழக்கிழமை சுவாதி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய பகல் 11.34 மணியின்மேல் 12 மணிக்குள் வரும் கடக லக்கின சுபமுகூர்த்த வேளையில் எமது புதல்வன்

### பிரம்மஸ்ரீ பராபர சர்மாவுக்கு

ஜகத்குரு சங்கராசார்ய சுவாமிகளின் அருளாசியுடனும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாசாரியார் அவர்களின் குருவருளுடனும் வல்லை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர தேவஸ்தான மண்டபத்தில் சமய, விசேட, நிர்வாண தீட்சா ஆசார்யாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தீட்சாகுரு: பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வர சிவாசாரியார். (சுன்னாகம் கதிரமலை தேவஸ்தானம்)
வித்யாகுரு: பிரம்மஸ்ரீ தா.மகாதேவ சிவாசாரியார். (இணுவில் தர்மசாஸ்தா குருகுலம்)

பகல் ஒரு மணிக்கு இன்னிசை விருந்து நடைபெறும்.

*சிவன்கோவில், வல்லை.*
*021 - 2263337* (16809)

தங்கள் நல்வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகர சிவாசாரியார் குடும்பம்.

உதயன்

# வாஷிங்ரன் மாநாடு

சித்திரைப் புத்தாண்டு - சுபானு புதுவருடப்பிறப்பு இம்முறை போரற்ற அமைதிச் சூழ்நிலையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தொடரவேண்டும்; பிரச்சினை தீரவேண்டும்; நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே அனைவரதும் பிரார்த்தனையாக இருந்தது.

அதேவேளை, புதுவருடப் பிறப்புத்தினமான கடந்த 14 ஆம் திகதி அமெரிக்காவின் வாஷிங்ரன் நகரில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்குவது சம்பந்தமான மாநாட்டில் இடம்பெற்ற தவறு தமிழ் மக்களின் உள்ளத்தை முள்ளாகக் குத்திப் புண்ணாக்கிவிட்டது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவும் அபிவிருத்திக்கு உதவியும் வழங்க சர்வதேச நாடுகளைத் தூண்டும் மாநாடு அமெரிக்கப் பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தலைமையில் நடந்தது.

எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியாக நடத்தப்பட்ட மாநாடு இது.

இந்த மாநாட்டில் 21 நாடுகள் மற்றும் 16 சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட இரு தரப்புக்களில் ஒன்று இலங்கை அரசாங்கம் மற்றது விடுதலைப்புலிகள் இயக்கம்.

மாநாட்டில் அரசாங்கத்தின் பிரதிநிதியாக அமைச்சர் மிலிந்த மொறகொட கலந்துகொண்டார்.

விடுதலைப்புலிகளின் சார்பில் எவரும் கலந்துகொள்ளவில்லை. ஏனென்றால், புலிகளுக்கு அமெரிக்கா அழைப்பு விடுக்கவில்லை.

ஜப்பான் மாநாட்டுக்கு முன்னோடியாக முன்னர் நோர்வே அரசு நோர்வேயில் நடத்திய சமாதான ஆதரவு மாநாட்டுக்கு புலிகள் அழைக்கப்பட்டனர். அழைப்பையேற்று அவர்கள் பங்குபற்றினர்.

ஜூனில் நடைபெறவிருக்கும் ஜப்பான் மாநாட்டிலும் பங்குபற்ற புலிகள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். பங்குபற்றுவதென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

ஆனால், வாஷிங்ரன் மாநாட்டுக்கு மட்டும் புலிகள் - அதாவது தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் - அழைக்கப்படவில்லை.

இத்தனைக்கும் யுத்தத்தால் அழிந்துபோய்க்கிடக்கும் வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கு அரசாங்கமும் புலிகளும் இணைந்தே உலக நாடுகளிடமிருந்து உதவிகேட்டு பெற்றுக்கொள்வது என்று சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான கட்டத்திலேயே முடிவுசெய்யப்பட்டது.

அதற்கு மாறாகவே இப்போது காரியம் நடந்திருக்கிறது.

அரசாங்கப் பிரதிநிதி ஒருவர் வாஷிங்ரன் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டார். புலிகள் இயக்கப் பிரதிநிதி எவரும் அழைக்கப்படவில்லை.

இது குறித்து புலிகள் கவலைகொண்டிருக்கிறார்கள் என்பது தனக்குத் தெரியும் என்றார் மாநாட்டுக்குத் தலைமைதாங்கிய பிரதி ராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ்.

ஏன் புலிகள் அழைக்கப்படவில்லை என்பதற்கு அவர் விளக்கமளித்தார்.

சர்வதேச பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் தமிழ் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அமெரிக்கா சேர்த்திருக்கிறது. அதனால் அவர்களை மாநாட்டுக்கு அழைப்பதில் சட்டச்சிக்கல் இருக்கிறது என்றார் ஆர்மிடேஜ்.

புலிகள் சொல்லிலும் செயலிலும் பயங்கரவாதத்தைக் கைவிடவேண்டும். அதற்கு அப்புறம் அவர்களின் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து நீக்குவது பற்றி ஆலோசிக்கலாம் என்றும் ஆர்மிடேஜ் சொன்னார்.

இத்தனைக்கும் அமெரிக்காவில் பயங்கரவாதச் செயல் எதிலும் புலிகள் இயக்கம் ஈடுபடவில்லை என்றும் அந்த இயக்கத்துக்கும் உலகிலுள்ள மற்றப் பயங்கரவாத இயக்கங்களுக்கும் இடையில் தொடர்புகிடையாது என்றும் அமெரிக்கா ஏற்கனவே கருத்து வெளியிட்டிருக்கின்றது.

- அரசுடன் புலிகள் இயக்கம் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டு ஒரு வருடத்துக்கு மேலாகப் போரை நிறுத்தி அமைதிகாத்து வருகின்றது. அரசுடன் ஆறு சுற்று சமாதான பேச்சுக்களை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது.

பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆர்மிடேஜ் தாம் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டார். உலகநாடுகள் இலங்கையின் சமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும் தார்மீக ஆதரவும், நிதியுதவியும் தாராளமாகச் செய்யவேண்டுமென்றும் அவர் மாநாட்டில் கேட்டுக்கொண்டார்.

அப்படியிருந்தும் புலிகள் சொல்லிலும் செயலிலும் வன்செயல்களைக் கைவிடவேண்டும் என்கிறார். இதில் என்ன அர்த்தம் இருக்கிறது? வன்செயல்களில் ஈடுபடாதிருப்பவர்களை வன்செயல்களைக் கைவிடுங்கள் என்று கூறுவது வேடிக்கையல்லவா.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்னர் உரிமைப் போரின்போது நடந்த நிகழ்வுகளை வன்செயல்கள் என்று வர்ணிப்பது பொருந்துமா? அப்படியானால் இலங்கை அரசும் வன்செயலில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்குள்ளாகும்.

அதிகம் ஏன்? இன்று ஈராக் போரில் அமெரிக்கா அப்பாவிப் பொதுமக்களைக் கூடக் கொன்று குவிப்பதை என்னென்று சொல்வது? நீதி எல்லோருக்கும் சமமாகவே இருக்கவேண்டும்.

மொத்தத்தில் மாப்பிள்ளை இல்லாத கல்யாணமாக நடந்து முடிந்திருக்கிறது வாஷிங்ரன் மாநாடு!

# அரச உத்தியோகத்தர் அனைவரும் அபிவிருத்திப் பங்காளராகவேண்டும்!

## யாழ். அரச அதிபர் வேண்டுகோள்

அரச உத்தியோகத்தர்கள் எத்தரத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் அவர்கள் அபிவிருத்திப் பங்காளர்களாக செயற்பட்டு மீள்குடியமர்வு, புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் இவ்வாறு வலியுறுத்தினார். ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அரச அதிபர் மேலும் கூறியதாவது:-

தீவகப் பிரதேசம் ஆரம்ப காலத்தில் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக இருந்தது. தற்போது மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிக்கிறார்கள். அவர்களை இங்கு மீளக்குடியமர்த்தி அவர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவேண்டும். அதற்கு அரச உத்தியோகத்தர் பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும் - என்றார். அரச அதிபர் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் என்.மதனராஜன், ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலர் கணேசலிங்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

(ஓ-76)

## நாட்டு நடப்பு

அங்கொரு வயது வந்த
அழகிக்கு திருமணம் பேசி
சங்கரன் சமய பக்தன்
சான்றான்மை மிகவும் மிக்கோன்
பண்புள்ள பட்டதாரி தன்னை
பார்த்திட பாவை வந்தாள்
கையினில் சிகரட் இல்லை
கழுத்தினில் சங்கிலியும் இல்லை
வெண்மைசேர் வேட்டிகட்டும்
வித்தகரை நான் விரும்பேன் என்றாள்
கட்டுவேன் காற்சட்டை மாட்டி
கரத்தினில் 'சிகரட' தாங்கி
இஷ்டம்போல் 'கொண்டா' ஓடும்
இளைஞனையே முடிப்பேன் என்றாள்.

- விகடகவி.

# பொருள் பொதிந்த எழுச்சிப் பாடல்கள் தமிழர்களின் உணர்வை பிரதிபலிக்கின்றன!

## பின்னணிப் பாடகி ரீ.கே.கலா பாராட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.16

ஈழத்து எழுச்சிப் பாடல்கள் ஆழமான பொருள் பொதிந்தவையாகவும், தமிழ் மக்களின் உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பனவாகவும் அமைந்துள்ளன. அதனால் அவை எனக்கு நன்கு பிடித்துள்ளன.

- இவ்வாறு தெரிவித்தார் தென்னிந்திய திரைப்படப் பாடகி ரீ.கே. கலா.

இசை நிகழ்ச்சி ஒன்றுக்காக நகருக்கு வந்த இவர், நேற்று முன்தினம் யாழ். தங்கும் விடுதியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னிந்தியத் திரைப்படப் பாடல்களில் பெரும்பாலானவை தமிழையும், அதன் கலாசாரத்தையும் கொலை செய்வதாக காணப்படுகின்றன. அத்துடன் அப்பாடல்களைப் பாடுவோர் தமிழை ஒழுங்காக உச்சரிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர். இதனால், தமிழ் கொலை செய்யப்படும் நிலை காணப்படுகின்றது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ்மொழியையும், அதன் கலாசாரத்தையும் தமது உயிரிலும் மேலாக மதிக்கின்றனர். அதனை அவர்களுடைய எழுச்சிப்பாடல்களும், கலை பண்பாட்டு நிகழ்வுகளும் கட்டியம் கூறுகின்றன.

இங்கு நடைபெற்ற யுத்தம்பற்றி தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்கு பெரும்பாலும் தெரியாது. அத்தகையவர்களில் நானும் ஒருத்தி. இங்கு வந்து பார்த்தபோதுதான் இங்கு நடைபெற்ற கொடூரத்தின் தாக்கம் நன்கு புலப்படுகின்றது.

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற இயல், இசை, நாடக விழாவில் கலை பண்பாட்டுக் கழகத்தினால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் தமிழர்களின் போராட்ட வாழ்க்கையை சித்திரித்தன. அதில் வரும் பல காட்சிகள் என்னை மெய்சிலிர்க்க வைத்ததோடு மனதையும் ஒரு கணம் கலங்கடித்துவிட்டன.

ஈழத்தமிழர்களுக்கு மகிழ்ச்சியளிக்க வேண்டும் என்பதற்காக யாருடைய துணையும் இன்றி தமிழிசையை நடத்த இங்கு தனியாக வந்துள்ளேன். தமிழ் நாட்டில் எனக்குக் கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் ஈழத்தமிழர்கள்பட்ட துன்பங்கள் அனைத்தையும் எடுத்துக் கூறுவேன். தமிழ்ப்பெண்ணாக இருந்து கொண்டு இதனை நான் செய்யாதுவிட்டால் தமிழினத்திற்கு மாபெரும் துரோகம் இழைத்தவளாகக் கருதப்படுவேன்.

இங்குள்ள மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து, அனைத்து மக்களும் சமாதானத்துடனும் கௌரவத்துடனும் வாழவேண்டும் என்பதில் தமிழ் நாட்டவர்கள் உறுதியாகவுள்ளனர்.

நான் வெளிநாடுகள் பலவற்றிற்குச் சென்று தமிழிசை நடத்திய போதும் அங்கெல்லாம் இல்லாத அன்பும் மரியாதையும் இங்கு கிடைத்துள்ளதையிட்டு மனம் பூரிப்படைகின்றேன்.

தமிழ் சினிமா உலகில் தமிழ்ப்பின்னணிப் பாடல்களைப் பாடுவோர் மிகக்குறைவு. ஏனெனில், தமிழ் சினிமாப் படத் தயாரிப்பாளர்கள் தமிழ் பின்னணிப் பாடகர்களுக்கு உரிய சந்தர்ப்பத்தை வழங்குவதில்லை. இதனால், பல சினிமாப் பாடல்கள் தூய செந்தமிழில் வருவதில்லை. மாறாக மற்றவர்கள் ஏளனம் செய்யும் வகையில் கொச்சைத்தமிழில் பாடப்படுகின்றன.

இந்த நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும். ஒழுங்காக தமிழ் தெரியாத, தமிழின் பெருமையை உணராத வேற்று மொழிப பின்னணிப் பாடகர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்காது தமிழ் பாடகர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும்.

எனது தொழில் சினிமாவாக இருக்கின்றபோதும் தமிழையும், அதன் கலாசாரத்தையும் பேணவேண்டும் என்ற உந்துதலால் தான் தமிழிசை நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றேன்.

(ஓ-5)

# கட்டுப்பாடின்றி அதிகளவில் இரசாயன உரத்தைப் பயன்படுத்தினால் நீர், நிலவளங்களில் பாதிப்பு ஏற்படும்!

## இயற்கைப் பசளையிடும்படி அதிகாரி வலியுறுத்து

சண்டிலிப்பாய்,ஏப்.16

பயிர்ச்செய்கைக்கு இரசாயன உரங்களையும், இரசாயனக் கிருமிநாசினிகளையும் பயன்படுத்துவதை விவசாயிகள் கட்டுப்படுத்த வேண்டும். இவற்றை அதிகளவில் பயன்படுத்துவதால் எமது பிராந்தியத்தின் நீர்வளம், நிலவளம், காலநிலை ஆகியனவற்றிக்கு பாதிப்பு ஏற்பட்டு வருவதாக ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. சகல உயிர்ப் பிராணிகளுக்கும் இவற்றினால தாக்கம் ஏற்படுகிறது. இரசாயன உரப்பாவனையை இயன்றளவு குறைத்து இயற்கைப் பசளைகளையும் உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருள்களிலிருந்து பெறப்படும் பீடை கொல்லிகளையும் விவசாயிகள் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துவதற்கு முன்வரவேண்டும்.

யாழ்.விவசாயத் திணைக்களத்தின் ஒருங்கிணைந்த பயிர்முகாமைத்துவம் - மிளகாய் செய்கைத் திட்டத்தின்கீழ் பண்டத்தரிப்பில் நடைபெற்ற வயல்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுழிபுரம் கமநல கேந்திர நிலையப்பிரிவு விவசாய போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சசின்னத்துரை தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

வெளிநாடுகளிலுள்ள விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் வர்த்தக நிறுவனங்கள், இரசாயன உரம் போட்டாலும் கிருமிநாசினி தெளிக்காமல் உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களே தமக்குத் தேவைப்படுவதாக அறிவித்துள்ளன. வெளிநாடுகளிலுள்ளவர்களும் இச்சேதன உற்பத்திகளையே கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இந்த நிலையில், எமது பிரதேச விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர்ப்போஷாக்குத் திட்டத்தின் பிரகாரம், தங்கள் பயிர்களுக்கு கூட்டெரு, மாட்டெரு, பசுந்தாள் பசளை ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும். எமது முன்னோர்கள் இவற்றைப் பயன்படுத்தியே கமத்தொழிலில் ஈடுபட்டு வந்ததால் நல்ல தரமான விளைபொருள்கள், மரக்கறிகள் மக்களுக்குக் கிடைத்துவந்தன.

அன்றைய காலகட்டத்தில் யூரியா உரம் போட்டு உற்பத்தி செய்த புகையிலைக்கு மவுசு இல்லாமல் இருந்தது. இதனால் சில விவசாயிகள் இரவு வேளையில் யாரும் கண்டுபிடிக்க முடியாத வகையில் இரகசியமாகவே யூரியா உரத்தைப் பயிருக்குப் போடுவார்கள்.

ஆனால், தற்போது எல்லாப் பயிர்வகைகளுக்கும் இரசாயன உரங்களை கட்டுப்பாடின்றிப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. மிகவும் அவசியமான சந்தர்ப்பத்தில் மாத்திரம் தங்கள் பயிர்களுக்கு விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களின் அறிவுரைப்படி கிருமிநாசினியைப் பயன்படுத்தலாம் என்றார் அவர்.

விவசாயத் திணைக்கள யாழ்.மேற்கு வலய விவசாய உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீபாலசுந்தரம் உரையாற்றுகையில், மனித உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்துக்கும் ஊட்டச்சத்து அவசியம் தேவைப்படுகிறது. அதுபோலவே பயிர்வகைகளுக்கும் ஊட்டச்சத்து மிகவும் அவசியம். இதற்கு திட்டமிட்ட முறையில் இயற்கைப் பசளையிடுதல், வேப்பம் இலைச்சாறு, உள்ளிக்கரைசல் ஆகியவற்றைக்கொண்டு தயாரிக்கப்பட்ட பீடைகொல்லியைப் பயன்படுத்தல் ஆகியவற்றினால் நல்ல விளைச்சலைப் பெறக்கூடியதாக உள்ளது. இந்த முன்மாதிரிச் செய்கையை இப்பகுதியிலுள்ள விவசாயிகள் பின்பற்றினால் அதிக பயனைப் பெறமுடியும் - என்றார்.

பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனத் தலைவர் ச.செல்வரத்தினம், இரசாயனக் கிருமிநாசினிகளை அல்லது உரவகைகளைப் பயன்படுத்தாது மேற்கொண்ட மிளகாய்ப் பயிர்ச்செய்கை நல்ல பயனைக் கொடுத்தது. இதனை முன்னிட்டே மேற்படி வயல்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ-135)

### நாளை

சித்திரை 4
வியாழக்கிழமை
(17.04.2003)
திதி : பிரதமை
முன்னிரவு 11.37 வரை.
நட்சத்திரம்: சித்திரை
முற்பகல்: 08.51 வரை.
*பெரிய வியாழன்*
சுபநேரம் : 7.34 - 9.04
ராகுகாலம் : 1.34 - 3.04
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தைரியசாலியின் பார்வை கோழையின் வாளைவிட மேலானதாகும்.

# MATHS CENTRE

M.M.V. Road - Nelliady

**O/L - DAY CLASS** பகல் நேர வகுப்பு

அனுபவமுள்ள, சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்திய
ஆசிரியர் குழு

விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

(16549)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1941 | | 2003 |
| - | | - |
| 04 | | 03 |
| - | | - |
| 12 | | 18 |



### அமரர் செல்லப்பா தங்கராசா

(இளைப்பாறிய அதிபர்)

வஞ்சமில்லாப் புன்சிரிப்பே! பாசத்தின் உறைவிடமே
நெஞ்சுறுதி மிக்கவரே! தீபத்தின் சுடரே!
விஸ்வருபத்தின் சிக்கனமே - என்றும்
அஸ்தமிக்காத நினைவுகளே - உங்கள்
ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

(16675)

நாளை (17-04-2003) வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தும்பளை வீதி, பருத்தித்துறை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 23 | | 17 |
| - | | - |
| 03 | | 03 |
| - | | - |
| 1940 | | 2003 |



### அமரர் முத்துக்குமார் மயில்வாகனம்

*(கிராம சேவையாளர், அரியாலை)*

இன்று (16.04.2003) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*588/2, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (16795)

மனைவி,
பிள்ளைகள்.

## நெஞ்சகலா ஐந்தாண்டு நினைவலைகள்

| தாயின் மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 22 | | 11 |
| - | | - |
| 06 | | 05 |
| - | | - |
| 1956 | | 1998 |



### சுப்பிரமணியம் தனபாலசிங்கம்

(சந்திரன்)

(சிறி அம்பாள் ஸ்ரோர்ஸ் - திருநெல்வேலி)

ஐந்தாண்டு கடந்தும்
ஆறவில்லை எம்முணர்வு
பாசத்தின் திருவுருவே!
அன்று உம் அறிவுரைகள்
இன்று எம் நினைவலைகள்
நாளை நம் உயர்விற்கு
வேண்டும் உம் ஞானஒளி!

உம்பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர்.

*பொற்பதி றோட்,*
*கொக்குவில்.* (16782)

## கற்றலகம் திறப்பு

அராலி மத்தி செந்தமிழ் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டுவரும் 'தமிழ்ச்சோலை' கல்வி நிலையத்தில் இரவு நேரப் படிப்பகமாக கங்குல் கற்றலகம் நேற்று முன்தினம் புத்தாண்டு தினத்தன்று இரவு 7.30 மணிக்கு அங்குராட்பணம் செய்து வைக்கப்பட்டது. (ஜ-14)

## மயானம் புனரமைப்பு

கோப்பாய் தரவைப் பகுதியில் உள்ள கந்தன் காடு இந்துமயானம் பொது மக்களின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த மயானத்தை கோப்பாய் பகுதியில் உள்ள மூன்றிற்கு மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுமக்கள் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-72)

## வீதி விளக்குகளை பொருத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.16

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு மானிப்பாய் பிரதேச செயலாளர் மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி பிரதேசசபை எல்லைக்குள் வீதி விளக்குகள் இன்மையால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன என்றும் -

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் வீதி விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் - அவர் கோரியுள்ளார். (எ-185)

## சுகாதாரக் கருத்தரங்கு


அச்சுவேலி,ஏப்.16

ஆஸ்துமா நோயும் அதற்கான தீர்வுகளும் என்ற தலைப்பிலான சுகாதாரக் கருத்தரங்கு இன்று புதன் கிழமை காலை 10.00 மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையைச் சேர்ந்த செல்வி இ.காயத்திரி இதில் கருத்துரை வழங்குவார்.

மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் இதில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## அந்தியேட்டி அழைப்பு



அமரர்

### இராமலிங்கம் இராசரத்தினம்

(இளைப்பாறிய கிராமசேவை உத்தியோகத்தர்)

| தாயின் மடியில் | மண்ணின் மடியில் |
|---|---|
| 02 - 03 -1929 | 17 - 03 - 2003 |

*எங்கள் அன்புருவே!*
*துன்பங்களால் துவண்ட எம்மிதயம்*
*உங்கள் பிரிவால் நிதமும் துடிக்கிறது*


இன்று (16.04.2003) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகியவற்றிலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிவகாமி இல்லம்*
*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.* (164180

\- குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| அன்னை மடியில் | | குருநாதர் திருவடியில் |
|---|---|---|
| 25 | | 18 |
| - | | - |
| 05 | | 03 |
| - | | - |
| 1933 | | 2003 |



### அமரர் வேலாயுதம் வீரகத்தி

(புராதன குருநாதர் ஆலய பரிகலம் வழிவிடும் தொண்டர்)

திதி: சித்திரைப் பூரணை

அன்பிற்கோர் இலக்கணமாய் அவனியில் வாழ்ந்தீர்களப்பா
நன்று செய்து எம் நலங் காத்து நின்றீர்களப்பா
இன்பமாய் வாழ வழிகாட்டி நின்றீர்களப்பா
இன்னும் பல காலம் இருக்காது எங்கப்பா சென்றீர்கள்?
துன்பக் கடலில் தவிக்க விட்டு ஏனப்பா சென்றீர்கள்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய குருநாதர் மலர்ப்பாதம் வேண்டுகின்றோம்.

*எங்கள் அன்புத் தந்தையாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும் சகல விதத்திலும் உதவி ஒத்தாசைகள் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*இன்று (16-04-2003) புதன்கிழமை நண்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியையிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்பத்தினர் சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

மாசேரி,
வரணி. (16785)

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# புத்தாண்டுப் பலன் உங்களுக்கு எப்படி?

## கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம் முதல், பூசம், ஆயிலியம் முடிய)

**பு**னர்பூசம் 4ஆம் பாதம் முதல், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், ஆங்கிலத் திகதிப்படி ஜூன் 22 முதல் ஜூலை 23க்குள் பிறந்தவர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும்.

கடக ராசி நேயர்களுக்கு திருப்திகரமான வருமானமும், பொருளாதார சௌக்கியமும், வியாபாரத்தில் அபிவிருத்தியும் இந்த வருடம் ஏற்படும். வருட முற்பகுதியில் பாக்கியாதிபதியான குரு பகவான் உங்களுக்கு ஒருவகையில் சுபனாக இருப்பதாலும், உச்ச ஸ்தானத்தில் இருப்பதாலும், அதன்பின் தன ஸ்தானமாகிய சிம்மராசியில் பிரவேசிப்பதாலும் வருடம் முழுதும் யோககாரனாகவே இருக்கிறான்.

ஜூலை மாதம் வரை குரு பகவான் உங்கள் ராசியிலேயே பாக்யாதிபதியாக - உச்சனாக - இருப்பதால் வருமானத்தில் வளர்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் முதலீடு செய்ய அதிகமான பண வரவும் உண்டாகும். பலருக்குப் புதிய வியாபாரங்கள் அமையும். ஏற்கனவே தொழில் செய்வோர், அதனை விஸ்தரிப்பார்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வுகள் உண்டு. விவசாயிகளுக்கு லாபங்கள் கூடும்.

ஜூலை மாதத்திற்குப் பிறகு குரு பகவானின் சிம்ம சஞ்சாரத்தால் ஒப்பந்த வேலை, போக்குவரத்து, ஊடகம், சந்தைப்படுத்தல் போன்ற துறைகளில் உள்ளோர்க்கு கணிசமான லாபங்கள் ஏற்படும். சகோதர, சகோதரிகள் உறவு பலப்படும். குடும்பத்தில் சுகபோகம் உண்டாகும். கலைஞர்களும், விரிவுரையாளர்களும் புகழ் பெறுவார்கள்.

வியாபாரிகள், ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதத்தில் தொழிலில் சற்று கூடுதல் கவனம் செலுத்த வேண்டி வரும்.

சிலர் வாழ்க்கை முன்னேற்றத்துக்காக வெளிநாட்டுப் பயணம் செய்ய நேரிடும். அதேசமயம் தூரப் பயணங்களில் சற்று எச்சரிக்கையும் தேவைப்படும்.

சனி பகவான் உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் முதல் சுற்று ஏழரை நாட்டுச் சனியாக பிரபாவம் செய்வதால் அவ்வப்போது கவலைகள் ஏற்படும். ஆயினும் பிரச்சினைகளை சமாளிக்க தெய்வ வழிபாடு உதவும். வேலைத் தொந்தரவினால் சிலருக்கு ஆரோக்கிய பாதிப்பு சற்று அதிகமாகவே இருக்கும்.

திட்டமிட்ட நடவடிக்கைகளினாலும், முறையான செயற்பாடுகளினாலும் அதைச் சமாளித்து விடலாம்.

ஆயினும் குருவின் அமைப்பினால் இந்த வருடம் முழுவதும் பெரிய பதவி அடைவதற்கும், பேரும் புகழும் சேர்வதற்கும், சுப காரியங்கள், தர்ம புண்ய காரியங்கள் செய்வதற்கும் நிறைய சந்தர்ப்பங்கள் உருவாகும்.

மனை, வீடு போன்றவற்றிற்கு இந்த வருடத்தில் அதிக செலவு செய்ய வேண்டி வரும்.

சிலருக்கு சரீர பீடையும், மனச்சோர்வும் அடிக்கடி இருந்து வந்தாலும், பெரிதாகக் கவலைப்பட வேண்டாம். பெரிய பாதிப்புகள் ஏற்படாது. இந்த ராசி நேயர்கள் நீதிமன்றங்களின் படிகளில் ஏறாமல் இருத்தல் நலம். இந்த வருடத்தில் நீங்கள் சில வினோதப் பொருள்களை அடையும் பாக்கியம் உண்டு.

ஆன்மீகத்திற்காக அதிக செலவு செய்ய நேரிடும். சந்தான பாக்கியம், சந்தான சௌக்கியம் கூடும்.

அரசியல்வாதிகளுக்கு மக்கள் சேவையில் ஈடுபாடு அதிகரிக்கும். சொந்த விடயங்களில் சற்று தடையும் தாமதமும் ஏற்பட்டாலும் துணிவுடன் முன்னேறுவீர்கள்.

அடுத்த ஜனவரி முதல், குரு வக்ரகதி அடைகிறார். அதேபோல் ஒக்ரோபர் 26 முதல், சனி வக்ர கதி அடைகிறார். ஜூன் மாதம் முதல் அஷ்டமத்தில் குஜன் வருகிறார். ஓகஸ்ட் 6ஆம் திகதி முதல், குஜன் வக்ர கதி அடைகிறார். இந்த கால கட்டங்களில் குரு, சனி, செவ்வாய், பிரபாவம் சற்று அதிகபட்சமாகவே இருக்கும். ஆனால் அஷ்டம செவ்வாய்க்கு குருபார்வை ஏற்படுவதால், குறைகள் நீங்கி, கவலைகள் நீங்கி, பொதுவாக வெற்றிகளே உண்டாகும்.

மாணவமணிகளுக்கும் இது சாதகமான வருடமே. தேர்வில் வெற்றியும், உயர் கல்வி வாய்ப்புகளும் உண்டாகும். கலைத்துறை, சட்டத்துறையினருக்கு இந்த வருடம் அத்தனை சுமுகமாக இருக்காது. மளிகை, நிதி, ஜவுளி, பான்ஸி, பங்கு சம்பந்தப்பட்ட வியாபாரிகளுக்கு லாப நஷ்டங்கள் சமமாகவே இருக்கும்.

அரிசி மில், இரும்பு, மரம், கனிப்பொருள்கள், எண்ணெய், இரசாயனப் பொருள்கள் வியாபாரிகளுக்கு ஏப்ரல், மே, செப்ரெம்பர், நவம்பர், மார்ச் தவிர்த்து ஏனைய மாதங்கள் சிறப்பாக இருக்கும்.

சினிமா, கோழி, ஆடு, பால், மீன் போன்ற பண்ணைத் தொழில் வியாபாரிகள் ஆகியோருக்கு ஓகஸ்ட், செப்ரெம்பர், நவம்பர், ஜனவரி தவிர்த்த ஏனைய மாதங்கள் அதிக லாபத்தை ஈட்டித் தரும். இந்த வருடம் ஜூலை வரை மொத்த வியாபாரிகள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம்.

இந்த வருடத்தில் சனி பகவானுக்கு எள் எண்ணெய் தீபமிடுவது சுப பலன்களை அதிகரிக்கும். முருகனையும், லட்சுமியையும் கணேசரையும், சிவனையும், துர்க்கையையும் ஆராதனை செய்வது நல்லது. செவ்வாய், சனிக்கிழமைகளில் விஷ்ணு சகஸ்ர நாம பாராயணம் செய்வது அமைதியை வளர்க்கும்.

2, 1, 3, 6, 8, 9 இந்தத் திகதிகள் ஞாயிறு, வியாழன், வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளுடன் கூடி வரும் நாள்கள் இந்த ராசி நேயர்களுக்கு யோககரமான நாள்களாகும்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)

**ம**கம், பூரம் உத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவர்களுக்கும், ஆங்கிலத் திகதிப்படி ஜூலை 24ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 23ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கும் இந்த வருட பலன் பொருந்தும். பொதுவாக சிம்ம ராசி நேயர்களுக்கு இந்த வருடம் பொருளாதார சௌகர்யம் கூடும்.

ஜூலை மாதம் வரை உங்கள் திறமைகளை நிரூபிக்க வாய்ப்புகள் தேடி வரும். பேரும், புகழும், மரியாதையும் கூடும். ஆசிரியர்கள், கலைத்துறையினர், அரசியல்வாதிகளுக்கு அதிகபட்ச முன்னேற்றங்கள் காணப்படுகின்றன.

மே மாதத்திற்குப் பிறகு அனைத்து நேயர்களுக்கும் நம்பிக்கைகள் வளரும். திட்டமிட்டபடி வெற்றி பெற பிரகாசமான வழிகள் தென்படும். பெரும் காரியங்களைத் துணிந்து செய்யும் வாய்ப்புகள் கூடும். ஆன்மீகத்தில் [illegible] வளரும்.

ஜூலை மாதத்துக்குப் பிறகு குரு பகவான் ஜென்மத்தில் வருவதால் பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். வெளிநாட்டு விவகாரங்களிலும், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்திலும் அதிகபட்ச லாபங்கள் உண்டு.

ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் மட்டும் பொதுவாக எல்லா விஷயங்களிலும் சற்று கவனமாக இருக்கவேண்டும். குறிப்பாக வியாபாரிகள் எச்சரிக்கையோடு செயற்படவேண்டிய நேரமிது. ஆயினும் சமாளித்து விடுவீர்கள்.

இந்த ராசி அன்பர்களுக்கு 11ஆம் இடத்தில் அதாவது மிதுனத்தில் சனி சஞ்சாரம் ஏற்படுகிறது. இது உங்களுக்கு அந்தஸ்தையும், மதிப்பையும், பெருமையையும் கூட்டும்.

உத்தியோகஸ்தர்களுக்கு ஜூலை மாதத்திற்குப் பிறகு உள்ள காலகட்டங்கள் பிரமாதமாக இருக்கும். சிர மங்களைப் பொருட்படுத்தாமல் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு வேலைகளை முனைப்போடு செய்து வந்தால் நன்மையாக முடியும். பிரச்சினைகளை புத்திக்கூர்மையினால் சமாளிக்கும் திறன் அதிகரிக்கும்.

மாணவமணிகளுக்கும் இந்த வருடம் சாதகமானதென்றே கூறலாம். ஒக்ரோபர் 26ஆம் திகதிக்குப் பிறகு சனி வக்ர கதியில் வருவதால் அவரை வழிபடுவதும், அவருக்கு எண்ணெய்க் காப்பு சாற்றுவதும் நல்லது.

மளிகை சாமான், மரம், காகிதாதி, மிளகாய், எந்திர வியாபாரம் செய்பவர்களுக்கு தமிழ்ப் புத்தாண்டின் துவக்கம் முதல், ஜூலை மாதம் வரை நல்ல காலம் தான். பங்கு வியாபாரிகளுக்கு ஏப்ரல், மே, ஓகஸ்ட், செப்ரெம்பர், நவம்பர், ஜனவரி மாதங்கள் சாதகமாக இல்லை.

சினிமா, வஸ்திரம் (ஜவுளி), கோழி, ஆடு, மாடு, பால்பண்ணைத் தொழிலாளர், தோட்ட அதி பர்கள் போன்றவர்களுக்கு ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, செப்ரெம்பர், ஒக்ரோபர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்கள் அதிக லாபகரமாக இருக்கும்.

மேற்கண்ட துறையினரைத் தவிர ஏனையோருக்கும், சுய தொழில் செய்வோருக்கும் ஜூலை மாதத்திற்குப் பிறகு கால நேரம் சாதகமாக உள்ளது.

ஜூன் மாதம் முதல் டிசம்பர் 5ஆம் தேதி வரை செவ்வாய் உங்களுக்கு 7ஆம் ராசியில் இருக்கின்றார். அவர் ஜனவரி 24ஆம் திகதி வரை 8ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்கிறார். இதனால் செவ்வாய் பலம் சரியாக அமையாதவர்கள், அறுவைச்சிகிச்சைக்கு ஆளாக நேரிடலாம்.

பலருக்கு வீடு மாறுதல் ஏற்படும். குடும்பத்தில் கணவன் மனைவியரிடையே சகஜ நிலைமை இருக்காது. ஆனால் இப்படிப்பட்ட காலத்தில் குரு, கேது பலம் கூடுவதால் பெரும்பாலான தொல்லைகள் நீங்குமென்றே கூறலாம்.

இந்த வருடத்தில் இந்த ராசி நேயர்கள் செவ்வாய்க்கிழமை விரதமிருப்பதும், சுப்ரமணிய சுவாமியை வழிபடுவதும், பவளத்தை அணிவதும் மிக மிக நல்லது.

பெண்மணிகள் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் விரதமிருப்பதும், ஆஞ்சநேயரை பூஜிப்பதும் அவசியம். முக்கியமாக கனக தாரா ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்ய வேண்டும். இது பாக்கியங்களைக் கூட்டும்; எல்லாவித இடையூறுகளையும் நீக்கும்.

1, 2, 4, 5, 6, 9 திகதியுடன் கூடிய, ஞாயிறு, வெள்ளி, புதன்கிழமைகள் இந்த ராசி நேயர்களுக்கு யோககரமானது.

## கன்னி

(உத்திரம் 2ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் முடிய)

உத்திரம் 2ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கும் ஆங்கிலத் திகதியில் ஓகஸ்ட் 24 முதல் செப்ரெம்பர் 23ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும்.

இந்த வருடம் கன்னி ராசி நேயர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கூடிவரும். உங்கள் ராசிக்கு குரு, செவ்வாய் பலம் அதிகமாக உள்ளது. குரு பகவானின் உச்ச சஞ்சாரத்தால் விசேஷமான பலன்களை எதிர்பார்க்கலாம். மனதில் குதூகலமும், ஆனந்தமும் ஏற்படும்.

ஜூலை மாதம் வரை குரு சஞ்சாரம் 11ஆம் இடத்திலும், 12ஆம் இடத்திலும் இருப்பதால் ஆன்மீக சிந்தனை வளரும். வெளிநாடு செல்ல முயற்சிப்போருக்கு சாதகமான காலமிது. வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு இடமாற்றம் ஏற்படும்.

கலை நிகழ்ச்சிகள் நடத்துபவர்களுக்கும், கலைஞர்களுக்கும் இந்த வருடம் ஏற்றம் தரும். ஆன்மீகத்தில் உள்ளவர்களுக்கும், உளவுத்துறையினருக்கும், விஞ்ஞானத்துறையினருக்கும், கலாசாலை சம்பந்தப்பட்டவர்களுக்கும், மருத்துவத் துறையினருக்கும் அதிகபட்ச முன்னேற்றங்கள் உண்டு.

வருட ஆரம்பத்தில் வேலைத் தொந்தரவுகள் இருக்கும். ஆயினும் பொறுப்புகள் கூடும். புதிய பதவிகள் கிடைக்கும். ஜூலைக்குப் பிறகு குருவின் சிம்ம ராசி சஞ்சாரமும் இந்த ராசிக்காரர்களுக்கு பெயர், புகழ், மரியாதையைக் கூட்டும். உறுதியுடனும் மனசாட்சிக்கு உகந்த வகையிலும் திட்டமிட்ட காரியங்களில் வெற்றி வாய்ப்பு உருவாகும்.

தொழில், வேலைகளில் கடமைப் பொறுப்புடன் செயற்பட்டால் நல்ல முன்னேற்றத்தை அடையலாம். கொள்முதல் விற்பனையில் லாபங்கள் கூடும். சொத்து அபிவிருத்தியாகும். எதிர்பாராமல் வீடு, மனை போன்றவை வாங்கும் யோகமும் உண்டாகும். தாம்பத்ய சௌக்கியமும், புத்திர சௌக்கியமும் கூடும். பந்து மித்ர வரவேற்பு உண்டு. கடந்த நாள்களாக இருந்த தகப்பன் வழி பிரச்சினைகள் நீங்கி அன்பும் பாசமும் வளரும்.

தேவைக்கேற்ற பண வசதிகள் உண்டாகும். பிரச்சினைகள் அனைத்தும் பரிதியைக் கண்ட பனி போல் வந்தது தெரியாமல் மறையும். சற்று உடல் சிரமங்கள் இருக்கும். மனதில் சற்று இறுக்கங்கள் இருந்தாலும் கவலைப்பட வேண்டாம். கூட்டு வியாபாரங்கள் எப்போதும் போல் சாதாரணமாகவே இருக்கும்.

அரசுத் துறையினருக்கும் அரசு சம்பந்தப்பட்ட விவகாரங்களிலும் அனுகூலம் இருக்காது.

சனி பகவான் வருடம் முழுவதும் 10ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்வதால் வேலைகள் சற்று மெதுவாகத் தான் நடக்கும். ஆனால் உங்கள் புத்திக் கூர்மையினால் வெற்றிகரமாகப் பூர்த்தியாகும். வருட ஆரம்பத்தில் சற்று மந்தமாகவே செயற்படுவீர்கள். ஆனால் எதிர்கால வாழ்வு ஒளிமயமாகவே இருக்கும்.

வருமானத்திற்கு மேல் செலவு இருக்குமாதலால் செலவினங்களில் கட்டுப்பாடு தேவைப்படும்.

கேதுவின் 3ஆம் இடத்து சஞ்சாரமும் சாதகமாகவே உள்ளது. அதனால் தெய்வ பலம் கூடும். பெரியவர்களின் ஆசி கிட்டும். வீட்டில் சுக சந்தோஷங்கள் நிறையும்.

மாணவமணிகளுக்கு நடுத்தரமான பலனே தென்படுகிறது. விஞ்ஞானத்துறையினருக்கு கடும் முயற்சியில்தான் நற்பலன்கள் கூடும். உத்தியோகஸ்தர்களுக்கு மே, ஜூன், ஜூலை, ஒக்ரோபர், நவம்பர், பெப்ரவரி மாதங்களில் உயர் அதிகாரிகளின் ஆதரவு கிட்டும். பதவி உயர்வும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு அதிக ஏற்றமோ, அதிகத் தாழ்வோ இல்லை. நல்ல வேலை தேடுபவர்களுக்கும், உத்தியோகமற்றவர்களுக்கும். திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கும் இந்த வருடம் புதிய கதவுகளைத் திறக்கும்.

இயந்திர சாதனங்கள், இரும்பு, மளிகை, சிமெந்து போன்றவற்றை விற்பவர்களுக்கு ஏப்ரல், ஜூன், ஜூலை, செப்ரெம்பர், ஒக்ரோபர், டிசெம்பர், பெப்ரவரி மாதங்களில் விசேஷமான லாபங்கள் உண்டு.

நிதி, பங்கு வியாபாரம், ஒப்பந்த வேலைகாரர்களுக்கு ஏப்ரல், ஓகஸ்ட், செப்ரெம்பர், டிசெம்பர், ஜனவரி மாதங்கள் சற்று அனுகூலமாக இருக்காது.

பால்பண்ணை, மரம், எண்ணெய், சாயத் தொழிலாளர்களுக்கு மத்திமமான பலனே இருக்கும். சட்டத்துறை, சுயதொழிலாளர்களுக்கு ஜூலை வரை நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம்.

டிசெம்பர் 5ஆம் திகதிக்குப் பிறகு செவ்வாய் சஞ்சாரம் சாதகமாக இல்லாததால் சற்று குழப்பங்கள், பணப்பற்றாக்குறை, சொத்துப் போக்குவரத்து விஷயங்களில் சிக்கல்கள் ஏற்படலாம். அங்காரகனையும், முருகக் கடவுளையும் மறவாமல் துதிப்பது இந்தச் சூழலில் இருந்து விடுபட வழிகாட்டும்.

வருகின்ற ஜூன், ஜூலை மாதத்தில் நிலுவையில் இருக்கும் கடனைத் தீர்க்கும் வாய்ப்பு உள்ளது. உங்கள் கோப, தாபங்களை அடுத்தவர் மீது காண்பிக்காமல் இருங்கள். அதனால் நன்மை உண்டாகும்.

ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதத்தில் உடல் ஆரோக்கியத்தில் கவனத்தைச் செலுத்த நேரிடும். உடலில் ரணங்கள், கட்டிகள் போன்றவை ஏற்படலாம். கவனமாக இல்லாவிட்டால் அறுவைச் சிகிச்சை செய்ய நேரிடும்.

இந்த ராசிக்காரர்கள் ராகு, கேதுவுக்கு அவ்வப்போது அர்ச்சனை செய்யவும். ஏற்கெனவே குறிப்பிட்டபடி முருகனை வழிபடுவது முன்னேற வழி வகுக்கும். தட்சிணாமூர்த்தியையும் பூஜிக்க வேண்டும். இதனால் சிரமங்கள் குறையும்.

இந்த வருடம் முழுவதும் சனிக்கிழமை, வியாழக்கிழமை விரதமிருப்பது நல்லது. லலிதா சகஸ்ரநாம பாராயணம் செய்வதால் குடும்பத்தில் இன்பம் கூடும். அவ்வப்போது சிவ தரிசனம் செய்து வந்தால் உடல் பலம் கூடும்.

பெண்மணிகள் வியாழன், வெள்ளிக்கிழமை விரதமிருப்பது நல்லது. துர்க்கை ஆராதனையும் ஆஞ்சநேயர் வழிபாடும் செய்வதால் குடும்ப சௌகர்யம்கூடும்.

5, 1, 3, 6, 8 திகதியுடன் கூடிய திங்கள், வியாழன், வெள்ளிக்கிழமைகள் இந்த ராசிக்காரர்களுக்கு யோககரமானது.

(வளரும்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஆங்கில தட்டச்சு இயந்திரம் இரண்டு விற்பனைக்குண்டு. MARITSA 30 Blue Rs. 3000/-, Smith Corona Brown Rs.4000/-. தொடர்பு: இல.548, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 3518, 021 226 - 3199. (16748)

கந்தர்மடம், பழம்வீதி, உடையார் ஒழுங்கையில் இருக்கும் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: T.P. No. 01-500511 (16816)

## வீடு விற்பனைக்கு

"சித்திரகிரி", சூராவத்தை, சுன்னாகம் என்ற இடத்தில் Attach Bathroom உடன் கூடிய 5 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சிவலிங்கம் (J.P), ஏழாலை மேற்கு, ஏழாலை. (16804)

## தேவை

யாழ்.நகரிலிருந்து 3 மைல் சுற்றாடலுக்குட்பட்ட இடத்தில் வீடு அல்லது காணி தேவை. தொடர்பு: 0777 722215. (16750)

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 7இல் செவ்வாய், பாவம் கூடிய, பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும், 24 வயதுடைய, சிவந்த, அழகிய மணமகளுக்கு பெற்றோர் நற்குணமுள்ள, படித்த மணமகனைத் தேடுகின்றனர். பொறியியலாளர், விரிவுரையாளர், வங்கி உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. கனடாவில் வசிப்பவர்களுடன் வெளிநாட்டவரும் விண்ணப்பிக்கலாம். விள.இல.1848, மே/பா உதயன். (16747)

## தவறிவிட்டது

அம்மாள் கோவிலடி மாதகலைச் சேர்ந்த க.றமணன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 812393430V) யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும். (16805)

## இலக்கிய விமர்சனம்

தமிழில் உள்ள ஒரேயொரு நாடக விமர்சனநூல். 1.கோடை நாடகம் 2.நாகம்மாள் நாவல் 3.தமிழில் இலக்கிய விமர்சனம் ஆகியவற்றைக் கொண்டது. A/L மாணவர்களும் படிக்கலாம். ஆக்கம்: அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. ரூபா 40/-. (16792)

## அபூர்வ ஜோதிடம்

நவீனத்துவம் வாய்ந்த சித்த மருந்தியலில் தீராத நோய்க்கு உடனடி நிவாரணம், அதிர்ஷ்டபலன் பெறல் தினமும் 8.30 - 2.00 p.m. சேச் முன் லேன், முதலி கோயிலடி, கொக்குவில் மேற்கு. (16799)

## காணவில்லை

வண்டில் மாடு ஒன்று, நிறம் சிவப்பு செங்காரி 29-3-2003 அன்றிலிருந்து காணவில்லை. கண்டவர்கள் S.பரந்தாமன், இல.20, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (16800)


**கீன் சென்ரர்**
**திருநெல்வேலி**

**A/L 2005**
**கலை, வர்த்தகம்**
**ஆரம்பம் 16.04.2003**
**இன்று மாலை 3 மணி**
(16844)



**வான் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள Toyota Hiace (செல்மொடல்). A/C,P/S முழு ஆசனம், heeter wiper, cutglass 1989 மொடல், 57-9XXX என்ற வான் விற்பனைக்கு உண்டு. *13.04.2003 வரை பார்வையிடலாம்.
தொடர்புகட்கு:-
கொய்யாத்தோட்டம் கொமினிகேஷன்
7/8, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்.
T.P. 0777 - 311618,
221 1414.
(26828)


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.16

நயினாதீவு பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாளாகிய இன்று புதன்கிழமை இரவு 8.00 மணிக்கு பூங்காவன உற்சவம் இடம்பெறும். பிற்பகல் 3.30 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி இரவு 8.00 மணிக்கு பூந்தண்டிகையில் எம்பெருமான் ஆரோகணிப்பார்.

இரவு 10.00 மணிக்கு இறைவன் உறைவது உள்ளத்திலா? ஆலயத்திலா? விண்ணிலா? என்ற கருப்பொருளில் உடுவில் பாரதியார் கழகத்தினரின் பட்டிமன்றம் இடம்பெறும்.

★ ★ ★

கோப்பாய்,ஏப்.16

கோப்பாய் ஸ்ரீ வெள்ளெருவை விநாயகர் ஆலய வருடாநத சங்காபிஷேகம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் (ஓ-72)

★ ★ ★

கோப்பாய்,ஏப்.16

கோப்பாய் - நீர்வேலி கரந்தனூர் சிவபூதநாதேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து மகோற்சவம் நடைபெற்று எதிர்வரும் 30 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஓ-72)

★ ★ ★

கொழும்புத்துறை,ஏப்.16

தவக்காலத்தின் புனிதவாரமாகிய இவ்வாரத்தில் அனைத்து கிறிஸ்தவ ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். புனித மரியாள் பேராலயத்தில் ஆயர் தலைமையில் புனித வார திருச்சடங்குகள் இடம்பெறவுள்ளன.

17 ஆம் திகதி புனித வியாழக்கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு திருப்பலியும் 8.00 மணிக்கு ஆராதனையும்-

புனித வெள்ளிக்கிழமை அன்று காலை 6.00 மணிக்கு திருச்சிலுவை தியானமும் மாலை 5.00 மணிக்கு திருச்சிலுவை ஆராதனையும்-

புனித சனிக்கிழமை அன்று இரவு 11.00 மணிக்கு திருவிழிப்பு ஆராதனையும் இடம்பெறும். (ஓ-30)

★ ★ ★

குருநகர்,ஏப்.16

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஐவர் எதிர்வரும் 24 ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்கள். (ஓ-51)

## வாராந்த நிகழ்வு

சண்டிலிப்பாய்,ஏப்.16

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமை தோறும் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் முற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் பகவத் கீதை சொற்பொழிவு நிகழ்த்துவார். இதன் அறிமுகவுரையை க.தர்மலிங்கம் நிகழ்த்துவார். (ஓ-135)

# திருமலை லயன்ஸ் கழக ஆதரவில் இலவச கண் சத்திரசிகிச்சை

திருகோணமலை லயன்ஸ் கழகம கண்பார்வை குறைந்த முதியோர்களுக்கு இலவச கண் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாதமும் 50 பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களைக் கண்டிக்கு அழைத்துச் சென்று இலவச கண்பரிசோதனை மற்றும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கான சகல உதவிகளையும் திருகோணமலை லயன்ஸ் கழகம் வழங்கிவருகின்றது. இம்மாத இறுதியில் செல்வநாயகபுரம், அன்புவழிபுரம், துவரங்காடு, அலஸ் தோட்டம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

சிகிச்சை பெற்றுக்கொள்ள விரும்பும் திருகோணமலையைச் சேர்ந்த முதியவர்கள் இம்மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை செல்வநாயகபுரம் சுவாமி தந்திரதேவா ஆச்சிரமத்துக்கு வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-8)

## வீதி விளக்குகளின்றி பாதசாரிகள் சிரமம்

புலோலி கிராமக்கோட்டுச் சந்தியிலும், அதனுடன் இணைந்த வீதிகளிலும் உள்ள வீதி மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. இம் மின்விளக்குகள் நீண்ட காலமாக திருத்தப்படாமையினால் இரவு வேளைகளில் இவ்வீதிகளால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ஓ-173)


**மாபெரும் மலிவு விற்பனை**

ஈஸ்ரர் பண்டிகையை முன்னிட்டு இன்றும்
எமது நிறுவனம் திறந்திருப்பதுடன் எமது மலிவு விற்பனை
20-04-2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**சகல வகையான புடைவைகளையும்**
விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்:

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. : 222 2381

(C/27424)



**யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**
**க.பொ.த.உயர்தரம் - 2005**

க.பொ.த.உயர்தரம் - 2005 கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைப் பிரிவுகளில் மாணவர்கள் அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 05-05-2003

வி.மாணிக்கம்
அதிபர்

(C/27428)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22
-
04
-
1934



மறைவு
11
-
05
-
1998

### திருமதி இரத்தினம் சண்முகம்

திதி: 2003-04-16

எண்ணிக்கையில் ஆண்டு ஐந்து - அம்மா!
எண்ணி கையில் எமை ஏந்திய அன்பை
எண்ணுகையில் என்றும் இன்பம் இன்பம்
மண்ணில் காலங்கள் ஓடும் - எங்கள்
மனதில் உன் நினைவே ஓடும்
இன்னும் இன்னும் ஒளியாவாய்
எங்கள் வாழ்வின் வழியாவாய்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*57, மருதடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(16827)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29
-
10
-
1932



மறைவு
26
-
04
-
2002

அமரர்

### கிருஷ்ணர் பாலகிருஷ்ணபிள்ளை

(மதுரம்)

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஐயா என்றழைக்க நீங்கள் இல்லையே
எம்மையெல்லாம் சிறப்புற வாழவைத்த தெய்வமே
உறவைத் துறந்து பாசம் மறந்து
இறைவனடி சேர்ந்த ஐயா மீண்டும்
ஒருமுறை வந்து அன்பு மொழி கூறமாட்டீர்களா?

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*மந்திகை,*
*புலோலி.*
(C/27429)

## துயர் பகிர்கின்றோம்

நில அளவையாளரும், ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய முன்னாள் தலைவருமாகிய

### K.கனகசபாபதி

அவர்கள் 15-04-2003 அன்று காலமானதால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரது துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரது ஆத்மா விநாயகர் பாதம் சென்றடையப் பிரார்த்திக்கும்...

நிர்வாக சபையினர்,
ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்.

ஊரெழு.
(16834)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
1940
-
06
-
14



தாயுமானார் அடியில்
2003
-
03
-
17

அமரர்

### சின்னத்தம்பி இரத்தினசிங்கம்

(குழந்தை)

திதி வெண்பா

சீர்சிறந்த சித்திரபானு ஆண்டெடுத்து விரதமிகு
பங்குனித் திங்கள் மூன்றாம் நாளில் வைகறை
வளர் பிறை சதுர்த்தசித் திதியில் இறைபிணிபுமிகு
இரத்தின சிங்க உத்தமனார் இறையடியில் அமரராய்.

அன்புக் கணவராகவும் அருமை அப்பாவாகவும் பாசமிகு சகோதரனாகவும், நேசமிகு மாமனாகவும் பிரியமிகு மைத்துனராகவும், ஆசைமிகு சித்தப்பாவாகவும் செல்லமிகு பேரனாகவும் விளங்கிய எங்கள் குலவிளக்கே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மனைவி,
பிள்ளைகள், குடும்பத்தினர்.

*175,நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(16830)

# ஏறாவூர் தமிழ்ப் பகுதியில் மீளக்குடியமர்வு எப்போது?

## இடம்பெயர்ந்த பொதுமக்கள் கேள்வி

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் தமிழ்க் கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் அங்கு மீளக்குடியமர உதவுமாறு கோரிவருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் கிராமத்தை அண்டிய ஏறாவூர் தமிழ்க் கிராமத்தில் சகலவசதிகளுடனும் வாழ்ந்த தமிழ் மக்கள் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட கலவரத்தில் இடம்பெயர்ந்தனர். அவர்கள் மீளக்குடியமர வேண்டுமென அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம், கிழக்கு புனர்வாழ்வு அமைச்சிடம் பல கோரிக்கைகள் விடுத்தும் இதுவரையில் எதுவித நடவடிக்கைகளையும்அமைச்சு எடுக்கவில்லை.

மேற்படி அமைச்சு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து மெத்தனமாக உள்ளதாக கிராம அபிவிருத்திச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இப்பகுதியில் உடைக்கப்பட்ட நிலையில் வீடுகளும், கடைத்தொகுதிகளும் இருக்கின்றன. இவற்றிற்கான இழப்பீடுகள் எதுவும் வழங்கப்படவில்லையெனவும் குற்றம்சாட்டிய மேற்படி அமைப்பு கிழக்குப் புனர்வாழ்வு அமைச்சுக்கும், மாவட்ட அரசாங்க அதிபருக்கும் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையொப்பங்கள் பெறப்பட்ட மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.



ஏறாவூர் தமிழ்ப் பகுதியில் சேதமடைந்த கடைத்தொகுதி ஒன்று.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் காடையர்களினால் உயிர், உடைமைகள் சேதமாக்கப்பட்ட நிலையில் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்தனர். அவ்வேளையில் எந்தவொரு நிவாரணப் பணிகளும் மனிதாபிமான அடிப்படையிலாவது வழங்கப்படவில்லை.

ஆகவே, இவ்விடயத்தில் இனபேதம் பார்க்காமல் கிழக்கு மாகாணத்திற்குரிய புனர்வாழ்வு அமைச்சு கூடிய கவனம் செலுத்தி மீளக்குடியமரவைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு இழப்பீடுகள் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# கோப்பாய் சனசமூக நிலையத்தின் பொது அறிவுப் போட்டி முடிவுகள்.

கோப்பாய் வடக்கு சனசமூக நிலையம் நடத்திய பொது அறிவுப் போட்டி முடிவுகளில் முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் பிரிவு ரீதியாக வருமாறு:-

**கீழ்ப் பிரிவு**

ந.சரண்யா (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), பே.மகிழ்ரதி (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), ப.துஷாந்தன் (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்).

**மத்திய பிரிவு**

ச.தனுஷன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), ச.யோகாம்பிகை (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), ம.லாவண்யா (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி).

**மேற் பிரிவு**

சோ.திபேந்தினி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), இ.கஜேந்திரா (யாழ்.இந்துக் கல்லூரி), கு.பானுஜா (கிறிஸ்தவ கல்லூரி).

மேற்படி மாணவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறும் விழாவின்போது வழங்கப்படவுள்ளது. (ஒ)

# சிறந்த மாணவர்களுக்கு நல்லூர் பி.சபை உதவி

யாழ்ப்பாணம்,ஏப்.16

வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்களுக்கு மாதாந்தம் 250 ரூபாவை ஊக்குவிப்பு நிதியாக நல்லூர் பிரதேச சபை இவ்வாண்டு வழங்கவுள்ளது.

கடந்த 2000 ஆம், 2001 ஆம் ஆண்டுகளில் ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் சித்திபெற்றுப் பல்கலைக்கழக அனுமதி பெற்ற 11 மாணவர்களுக்கும் கடந்த 2002ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 15 மாணவர்களுக்குமே இந்த மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் -

இந்தக் கொடுப்பனவுத் தெரிவுகளில் வரியிறுப்பாளர்களின் பிள்ளைகளுக்கு முன் உரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் - பிரதேச சபைச் செயலாளர் எஸ்.செல்வரத்தினம் தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவுகள் உள்ளூராட்சி வாரமான ஜூலை 14 ஆம் திகதிக்கும் 20ஆம் திகதிக்கும் இடையில் வங்கிமூலம் உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-180)

# மின்விநியோகம் விஸ்தரிப்பு

சாவகச்சேரி,ஏப்.16

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி நிலையம் 250 கே.வி.ஏ. கொள்ளளவுள்ள மின்பிறப்பாக்கி ஒன்றின்மூலம் மீசாலை தெற்கு, மீசாலை மேற்கு ஆகிய பகுதிகளுக்கு மின்சார விநியோகத்தை விரிவுபடுத்தியுள்ளது. இந்த மின்பிறப்பாக்கி மூலம் இரவு வேளையில் மட்டும் மின்சாரம் வழங்கப்படுகிறது. நாளாந்தம் மாலை 7 மணி தொடக்கம் இரவு 11 மணி வரையும் காலையில் 5 மணி தொடக்கம் 6 மணிவரையும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

·இதேவேளை, சாவகச்சேரி நகருக்கு நாளாந்தம் காலை10 மணி தொடக்கம் பிற்பகல் 2மணிவரை மின்சாரம் வழங்கப்படுகிறது. (ஒ-31)

# மீள்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் உதவித் திட்டங்களில் புறக்கணிப்பு?

**ஏ-9** பாதை திறக்கப்பட்ட பின்னர் குடாநாட்டுக்கு வந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் முன்னுரிமை கொடுக்கும்படி யாழ்.அரச அதிபர் பத்திரிகைகள் மூலமும் சுற்றுநிருபங்கள் மூலமும் வலியுறுத்தினார். ஆனால், இங்கு மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் புனர்வாழ்வு உதவிகளில் புறந்தள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி புனர்வாழ்வுச் செயற்பாட்டை சிறந்த முறையில் முன்னெடுக்கவேண்டும் என்பதற்காக அனுபவம்மிக்கவர்கள் என்றுகூறி 65-70 வயதுடைய ஓய்வூதியர்கள் யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனர்நிர்மாணப் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

பழுத்த அனுபவம் மிக்கவர்கள் என்று கூறப்படும் இவர்கள், நியமனம் செய்யப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவரும்போது புனர்வாழ்வு உதவிகளில் தாம் புறக்கணிக்கப்படுவதாகக் கூறி போராட்டம் நடதத முஸ்லிம் மக்கள் முஸ்தீபு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இது அரச நிர்வாகம் எவ்வளவு தூரம் இம்மண்ணில் செயற்படுகின்றது என்பதை ஆராயவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மையாகும்.

முஸ்லிம் பகுதிக்கென அடிமட்டத்தில் கிராம அலுவலர்கள் காணப்படுகின்றார்கள். அவர்கள் இம்முஸ்லிம் மக்கள் விடயத்தில் கவனம் எடுக்கவில்லை என்றால் அவர்களுக்கு எதிராகப் பிரதேச செயலாளர் மட்டத்தில் நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

பிரதேச செயலாளர் மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் அரச அதிபர் மட்டத்தில் நடவடிக்கை எடுத்து இருக்கலாம். ஆனால், முதலிரு மட்டங்களைக் கடந்து அரச அதிபர் காரியாலயத்தின் முன்னர் மறியற்போராட்டம் நடத்தப்போகும் முன்முயற்சியில் ஈடுபடுவதாக முஸ்லிம மக்கள் அறிவித்துள்ளனர். உயர்மட்டத தவறுகளே தாம் புறந்தள்ளப்படக் காரணம் என அவர்கள் நம்புவதனையே இது எடுத்துக்காட்டுகிறது.

இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்த யாழ்.மாவட்ட மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் தொழில் உபகரணங்கள் மற்றும் உலர் உணவு அல்லாத பொருள்கள், புடைவைகள என வழங்கிவருகின்றனர். ஆனால், முஸ்லிம் மக்களுக்கு இத்தகைய உதவிகள் கூடக் கிடைக்கவில்லை என்பது வேதனைப்படவேண்டியவிடயமாகும்.

முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து சென்று மீண்டும் அழிந்துபோன வீடுகளுக்கு வந்தபோது அங்கு அவர்களுக்கு கிடைத்தவை பெரும் ஏமாற்றமும் அதிர்ச்சியுமே. சொந்த வீட்டிற்கு வந்தவர்களை அவ்வீடுகளில் தங்கியிருந்தவர்கள் 'நீ யார்?' என்று கேட்டு விரட்டிய சம்பவங்களும் நடந்து தான் உள்ளன.




வீட்டில் இருந்தவர்கள் அந்த வீடுகளின் உரிமையாளர்கள் வந்த பின்னரும்கூட வீட்டைவிட்டுச் சென்றார்களா என்றால் இல்லை. வீட்டின் உரிமையாளர்களையே தாக்கிக் காயப்படுத்தும் அளவுக்கு கீாடைத்தனம் புரிந்துள்ளார்கள் என்பதும் கவலையளிக்கும் விடயமே.

'பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்ததைப்'போன்று இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களையும் அனுபவித்து விட்டு சமாதான சூழ்நிலையில் சொந்த வீட்டில் நிம்மதியாக வாழலாம் என்று வந்த முஸ்லிம் மக்களுக்கு அதற்கும்கூட வழியில்லாமல் போய்விட்டது.

மீளக்குடியமரவரும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடமை கிராம அலுவலர், பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர் என்று ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் உண்டென சுற்றுநிருபங்கள் பணிக்கின்றன.

ஆனால், இங்கு மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் விடயத்தில் அரச அலுவலர்கள் கண்மூடித்தனமாக நடந்துள்ளார்களா? அல்லது முஸ்லிம் குடும்பங்களில் தனிநபர் வந்து ஏனைய உறுப்பினர்கள் வராமையால் சுற்றறிருபங்களுக்கு ஏற்ப நடவடிக்கையெடுக்க முடியவில்லையா? என்பதும் மறுபுறத்தில் எழும் கேள்வியாகும்.

எது எவ்வாறாயினும் போராட்டம் ஒன்றை நடத்தும் அளவிற்கு மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் முன்வந்துள்ளார்கள் என்றால் அவர்கள் பக்கத்திலும் பெரும் மனக்குறை உண்டு என்றே சொல்ல வேண்டும்.

ஆகவே, முஸ்லிம் மக்கள் விடயத்தில் கவனம் செலுத்தாத உரிய அரச உத்தியோகத்தர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டும். அவர்கள் உயர் அதிகாரிகளாக இருந்தால் அதிலும் ஒப்பந்த அடிப்படையில் இருப்பவர்களாக இருந்தால் அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படவேண்டியவர்களே.

**வில்லவன்**

துரிதகதியில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் மக்கள் பாதிப்படைந்து மறியற்போராட்டம், சத்தியாக்கிரகம் என்று கொதித்தெழுவதற்கு மீள்நியமனம்பெற்ற ஓய்வூதியர்களே காரணமாக இருந்தால் அவர்கள் வீட்டுக்குச் செல்வதினால் எந்தத் தீமையும் ஏற்படப்போவதில்லை.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் மிகவும் கொதிப படைந்தும் ஆத்திரத்துடனும் காணப்படுகிறார்கள். ஏனையவர்களைப் போன்று மீளக்குடியமர்ந்தபோதிலும் மற்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற அரச உதவிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் தமக்கு ஏன் கிடைக்கவில்லையென்பதே அவர்களின் கேள்வியாகும்.

முஸ்லிம் மக்களை போராட்டங்கள் நடத்தும் அளவிற்கு செல்லவிடாமல் அவர்கள் விடயத்தில் அக்கறை காட்டப்பட வேண்டும் என்பதே மனிதாபிமானம் உள்ளவர்களின் விருப்பமாகும்.

தமிழ் மக்களை நம்பியே திரும்பி வந்த தமிழ் முஸ்லிம் மக்கள் இவர்கள். இவர்களையும் எமது உறவினர்களாக, உற்றார், சுற்றத்தவராக ஏற்று அரவணைக்கவேண்டியது தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும். ஆகவே, மீளக்குடியமர்ந்துள்ள தமிழ் முஸ்லிம் மக்களைப் புறந்தள்ளாது அவர்களின் நிலையை, தேவையை உணர்ந்து அவர்களுக்கும் ஏனைய மளக்குடியமரும் மக்களுக்கு கிடைக்கும் வசதிகள், சலுகைகள் கிடைக்கவேண்டும். ★



மானிப்பாய் மருதடியான் அறநெறிப் பாடசாலையில் நடைபெற்ற 'மருதடியான் மலர் 2003' வெளியீட்டு விழாவில் முதற்பிரதியை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனிடமிருந்து உடுவில் முருகமூர்த்தி ஆலய தர்மகர்த்தா ச.முத்தையா பெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

விழாத் தலைவர் கா.கணேசதாசன், ஆசிரியை செல்வி து.சரோஜினிதேவி ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# சிலுவையிலேயே வாழ்வு உண்டு

நீண்ட தவ முயற்சிகளை மேற்கொண்டு அதன் நிறைவாக பாஸ்கு விழாவை நிறைவேற்றி கிறிஸ்துவின மகிமையில் பங்குகொள்ள புனித வாரத்தில் நுழைந்துள்ள நாம் இந்நாள் வரை மேற்கொண்ட செப, தவ, தியாக முயற்சிகள் எம்மைச் சிலுவையால் கிடைக்கும் மகிமைக்கு இட்டுச் சென்றுள்ளனவா என்பதை ஒரு கணம் சிந்திக்கவேண்டும்.

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடப்பதில்லை. மாறாக, வாழவின் ஒளியைப் பெறுகின்றான்" என்ற

### தவக்காலச் சிந்தனை
### 4ஆம் நாள்

கிறிஸ்துவின் வார்த்தைகள் எமது தவக்கால வாழ்வில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன?

மனுக்குலம் முழுவதையும் பாவத்திலிருந்து மீட்கவும், எம் அனைவரையும் கடவுளின் ஒரே மந்தையாக்கவும தமது உயிரையே கொடுத்த கிறிஸ்துவிற்கு நாம் காட்டும் வெளிப்பாடு என்ன? நாம் புனிதத் தன்மை அடைய இவ்வுலகத்தையும் அதன் ஆசைகளையும் விலக்கி, பேசுவுடன் நம்மையே ஒன்றிக்கச் செய்திருக்கின்றோமா? இல்லை. பிறர் நம்மை புகழும்படியாக வெளிப்புற செயல்களில் மட்டும் ஈடுபடுத்தி அகப்புறச் செயல்களில் ஒருவர் ஒருவரைப் பழிவாங்குவதிலும், யூதாசைப் போன்று உன்னத குருவையே காட்டிக் கொடுக்கும் செயல்களிலும் எம்மை ஈடுபடுத்தி அன்பு, நேர்மை, தூய்மை, அர்ப்பணிப்பு, நீதி, சமத்துவம் போன்ற பண்புகளை மழுங்கடிக்கவில்லையா?

இறைமகன் கிறிஸ்து பெற்றுத் தந்த சிலுவை எமக்கு வெறுப்பாக, சுமையாக உள்ளது என்ற காரணத்தால் அதனை ஒதுக்கியிருக்கின்றோம். கிறிஸ்தவனது வாழ்வு சிலுவை வழியே. ஆனால், அதனை வாழ்வில் ஏற்றுக் கொள்ள மறுத்திருக்கின்றோம். இதனால்தானே யூதாசும் உலக சுகபோகத்திற்கு அடிமையாகி அன்பர் யேசுவைக் காட்டிக்கொடுத்தான். யூதாசின் இந்த இழிச் செயலை வெறும் வாய்ப் பேச்சளவில் கடிந்து கொள்ளும் நாம் எமது வாழ்வில் சிலுவை வழியைப் பின்பற்ற மறுத்து பல சந்தர்ப்பங்களில் யூதாசுகளாக மாறி எமது குடும்பத்தை, சமூகத்தை, ஏன் திருச்சபையையுமே அமைதியிழக்கச் செய்யும் செயல்களில் ஈடுபடுகின்றோம்.

எனவே, புனிதவாரத்தில் அடியெடுத்துள்ள நாம், எம் அநீத வாழ்வு நிலைகளை முழுமையாக மாற்றி சிலுவையினால் உண்டாகும் உன்னத வாழ்வினை அடைய கிறிஸ்துவின் உயிர்ப்பில் நாமும் உயிர்க்க எம்மையும் தகுதியுடையவராக்குவோம்.

# விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்திய அமரர் செ.சண்முகரத்தினம் ஞாபகார்த்த கரப்பந்தாட்டத்தில் 'செற அப்' மற்றும் 6 பேர் கொண்ட ஓவர் கேம் போட்டிகளில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும், 4 நபர் கொண்ட சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும சம்பியனாகின. 6 பேர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகத்தை வென்றது.

இவ்வாட்டத்தின் சிறந்த வீரர்களாக புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.சந்திரனும் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக வீரர் கெங்காதரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

'செற் அப்' ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்தது.

இவ்வாட்டத்தின் சிறந்த வீரர்களாக புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக வீரர் எல்.மகாவும் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக வீரர் எல் வசந்தகுமாரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நான்கு நபர் அணிகளுக்கிடையிலான போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம், அதனை எதிர்த்து விளையாடிய புத்தூர் கலை மதி விளையாட்டுக்கழகத்தை வென்றது.

இவ்வாட்டத்தின் சிறந்த வீரர்களாக புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கே.கதிர்காமநாதன் (செல்வம்), நவஜீவன்ஸ், விளையாட்டுக்கழக வீரர் எஸ்.கணேஷ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.16

வடக்கு - கிழக்கு விளையாட்டுக கழகத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கிடையிலான எல்லே சுற்றுப் போட்டியில் ஆண் மற்றும் பெண் பிரிவுகளில் பருத்தித்துறை பிரதேச செயலக அணிகள் இவ்வாண்டுக்கான சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

பிரதேச செயலகங்களுக்கிடையிலான எல்லே சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

முதலிடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும் மோதின.

இரண்டு இன்னிங்ஸ் கொண்ட இவ்வாட்டத்தில் 8 - 4 என்ற ஓட்ட அடிப்படையில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி வெற்றியீட்டியது.

அடுத்து இடம்பெற்ற பெண்களுக்கான எல்லே இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் பங்குபற்றின. இதில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 8-2 என்ற ஓட்ட அடிப்படையில் வெற்றியீட்டியது. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் மாவட்ட மட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

காலை 8.30 மணி சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

பிற்பகல் 2.00 மணி - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி எதிர் வேலணை துரைசாமி மகாவித்தியாலயம். (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.16

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு சக்தி எவ்.எம்.நிறுவனம் யாழ் மாவட்டத்தில் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் உடுவில் ஜங்ஸ்டார் விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் போஸ்டார் விளையாட்டுக்கழகமும், உடுவில் ஜங்ஸ்டார் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆரம்பம் முதல் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் ஜங்ஸ்டார் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

இவ்வாட்டத்தின் சிறந்த துடுப்பாளராக க.தினேஷ் (ஜங்ஸ்ரார் வி.க.), சிறந்த பந்துவீச்சாளராக ச.சுதன் (ஜங்ஸ்டார் வி.க.), சிறந்த களத்தடுப்பாளராக ப.றோகான் (போஸ்டார வி.க.), இவ்வாட்டத்தின் நாயகனாக க.சசிவர்மன் (ஜங்ஸ்டார் வி.க.) தொடர் ஆட்ட நாயகனாக க.தினேஷ் (ஜங்ஸ்டார் வி.க.) தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.16

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்படும் ஆண் மற்றும் பெண்களுக்கான கபடிச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8.00 மணி முதல் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. ஆண்களுக்கான போட்டியில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ வேலணை பிரதேச செயலக அணி எதிர் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி.

★ கரவெட்டி பிரதேச செயலக அணி எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி.

★ நெடுந்தீவு பிரதேச செயலக அணி எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.

★ யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி எதிர் உடுவில் பிரதேச செயலக அணி.

★ சங்கானை பிரதேச செயலக அணி எதிர் கோப்பாய் பிரதேச செயலக அணி.

★ சாவகச்சேரி பிரதேச செயலக அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி.

பெண்களுக்கான போட்டியில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★ உடுவில் பிரதேச செயலக அணி எதிர் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி.

★ சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டி பிரதேச செயலக அணி.

★ மருதங்கேணி பிரதேச செயலக அணி எதிர் சாவகச்சேரி பிரதேச செயலக அணி.

★ நெடுந்தீவு பிரதேச செயலக அணி எதிர் கோப்பாய் பிரதேச செயலக அணி.

★ சங்கானை பிரதேச செயலக அணி எதிர் வேலணை பிரதேச செயலக அணி.

★ யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி. (ஒ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.16

புதிய செம்மணி வீதி ஞானவைரவர் கோவிலடி ஞான ஒளி சனசமூக நிலைய விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஞானஒளி விளையாட்டு மைதானத்தில் தலைவர் திருமதி சசிகுமார் வளர்மதி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் ஞானோதய வித்தியாலய அதிபர் சு.ஞானலிங்கம் கலந்துகொள்வார். (ஒ-180)


## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தின் சக உத்தியோகத்தராக கடமையாற்றும்
திரு. சதாசிவம் செல்வராஜா
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி பொன்னம்மா சதாசிவம்

அவர்கள் 12.04.2003 அன்று காலமானதையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துன்ப துயரங்களில் நாமும் பங்கேற்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
பணிப்பாளரும் கமத்தொழில் காப்புறுதிச் சபையினரும்,
யாழ்ப்பாணம்.
பெரும்பாக உத்தியோகத்தர்களும், கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்களும், தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும்,
யாழ்ப்பாணம். (C-27435)



## புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு

புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சுக்கான
அத்தியாவசிய உணவுவகைகளின் வழங்கலுக்கான கேள்விப் பத்திரம்

யாழ்ப்பாணம், கொழும்பில் விநியோகிப்பதற்காக யாழ்ப்பாண அரச அதிபரின் நாவற்குழி களஞ்சியசாலைக்கும் கொழும்புத் துறைமுகத்திலுள்ள கொள்கலனுக்கும் சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச் சீனி வழங்கலுக்காக வெவ்வேறாக ஒரு கிலோவுக்கான விலை கொண்ட கூறுவிலை மனுக் கோரல், விநியோகஸ்தர்களிடமிருந்து இவ்வமைச்சினால் வரவேற்கப்படுகின்றன.

| | யாழ்ப்பாணம் |
|---|---|
| | மெ.தொன் |
| சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச் சீனி | 1,550 |
| பருப்பு | 450 |

மீளளிக்காத ஒரு வைப்புத் தொகை ரூபா 100/= வினைச் செலுத்தி 30.04.2003 அன்று அல்லது அதற்கு முன்போ இந்த அலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திர ஆவணங்களைச் சேகரிப்பதற்கு ஆர்வமுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. 30.04.2003 அன்று அல்லது அதற்கு முன்போ அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது 03 ஆவது மாடியில் அமைச்சின் கேள்விப்பத்திரப் பெட்டியில் பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைகள் இடப்படல்வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு உணவுவகைகளும் முழுமையாக வழங்கும் கேள்விப்பத்திரகாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

30.04.2003 அன்று பி.ப.3.10 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரகாரர் அல்லது அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி கூறுவிலைத் திறத்தலில் பங்கேற்க முடியும்.

தவிசாளர்,
*அரச திறுவனங்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் மற்றும் உணவு விநியோகத்தலுக்கான நிலையான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபை,*
*புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு,*
*இந்தாரம் மாடி, 14, ஸ்ரீமத் பரோன் ஜயதிலக்க மாவத்தை,*
*கொழும்பு – 01.* (C27434)



## பயிற்சி வகுப்புகள்

தையல், சிகையலங்காரம், ஐசிங், பூவேலைகள் போன்ற பல பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. 19.4.2003 சனிக்கிழமை புதிய பிரிவுகள் ஆரம்பமாக இருக்கின்றது.

★ *வெளிநாடு செல்வோருக்கு விரைவாக பயிற்சியளிக்கப்படும்.*

முகவரி:-
சிறி சாயி நிறுவனம்,
மானிப்பாய் வீதி,
உரும்பிராய்ச் சந்தி.
(16841)


## பாவங்களைப் போக்கிடும் சித்திரா பௌர்ணமி விரதம்

மாதந்தோறும் ஒவ்வொரு பௌர்ணமியும் ஒவ்வொரு அமாவாசையும் வருகின்றன. சூரியனும் சந்திரனும் பூமிக்கு நேராக ஒரேபாதையில் ஒரே ராசியில் சேர்ந்து நிற்கும் காலம் அமாவாசையாகும். இரண்டும் நேர் எதிர்த்திசையில் 180பாகையில் நிற்பது பூரணையாகும்.

இவ்விரு நாள்களும் பிதிர்களுக்கு விசேடமானவை. பௌர்ணமியைத் தாயாருக்கும், அமாவாசையைத் தந்தையாருக்கும் உரியதாகக் கூறுவர். மாதந்தோறும் இந்த விரதங்களை அனுஷ்டிக்க முடியாதவர்கள் சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவாசை ஆகிய இருநாள்களிலும் விரதமிருப்பர்.

சித்திரா பௌர்ணமியன்று நிலவு தோன்றியபிறகு மஞ்சள் அல்லது சாணத்தால் வாசலில் பிள்ளையார் செய்து வைத்து அதற்கு மலர்சூடி, அருகில் தீபம் ஏற்றி, கும்பம் வைத்துப் பொங்கிப் படைப்பார்கள். வழிபட்டபின்பு பொங்கலை அனைவருக்கும் வழங்கி இன்புறுவார்கள்.

மக்களின் பாவ, புண்ணியங்களைக் கணக்கெடுத்து யமதர்மனிடம் கொடுக்கும் பணிகளைச் செய்பவர் சித்திர குப்தன் என்றும் நமது பாவபுண்ணியங்களுக்கு ஏற்ப பலன்களை யமதர்மன் வழங்குகிறார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. நாம் செய்யும் குற்றங்களை சித்திரம் போல் இரகசியமாகத் தம்மனதில் நிலை நிறுத்திக் கொள்வதால் இவருக்கு சித்திரகுபதன் என்ற பெயர் ஏற்பட்டது என்பார்கள். இவரே யமதர்மராஜனது கணக் கப்பிள்ளையாவார். இவர் தனது கடமையைப் பாரபட்சமின்றி சரியாகச் செய்வதால் இவரது விரத தினத்தில் ஆலயம் தோறும் கும்பம் வைத்தும் நேர்மையாக எழுதுவதால் ஏடு, எழுத் தாணி, தராசு, படி, கொத்தில்

### இன்று சித்திரா பௌர்ணமி

அளந்த நெல் முதலியவற்றை வைத்து பூசை செய்வது வழக்கம்.

தாயை இழந்தோர் இந்தத் தினத்தில் தாய்க்கு பிதிர் கடன் தீர்க்கும் வகையில் வழிபட்டு விரதம் இருந்து புகழேந்திப் புலவர் இயற்றிய சித்திர குப்தன் கதையை படித்தும் கேட்டும் விசேட பலன் அடைவார்கள்.

இத்தினத்தில் சித்திரகுப்தனை வழிபடுதலின் முக்கிய நோக்கம் நமது செயல்களைக் கண்காணிக்கும் ஒரு சக்தி உண்டு என்பதை நமக்கு உணர்த்துவதே ஆகும். அன்றைய தினத்திலே தானதர்மங்கள் செய்து வழிபடுவதால் நாம் அறியாமல் செய்த தவறுகள் மன்னிக்கப்படுகின்றன.


## காணவில்லை



படத்தில் காணப்படும்
### சிவராசா அருட்செல்வி

என்பவரை கடந்த 10.04.2003 இல் இருந்து காணவில்லை. இவர் மனநோயாளருமாவார். இவருக்கு சமூக ஆதரவும் தொடர் கண்காணிப்பும் சிகிச்சையும் தேவையென வைத்தியர்கள் கூறியுள்ளார்கள். இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து உளமருத்துவப் பிரிவு, மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை எனும் முகவரிக்கு தகவல் தரவும்.
*சன்மானம் வழங்கப்படும்.*

ஆனைவிழுந்தான்,
வன்னேரி.
தகவல்:
(16837) சி.சிவசுதன் (சுதன் - மகன்)



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 11 - 1958



உதிர்வு 18 - 04 - 2000

### அமரர் திருமதி கமலாதேவி இரமணிதரன்

(சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம் முன்னாள் இலிகிதர்)

எம் அன்புத் தெய்வமே மூன்றாண்டுகள் கழிந்தால் என்ன?
எத்தனை யுகம் சென்றால் என்ன?
நீர் எமக்கு அணையாத தீபமன்றோ.
மீளாத் துயில்கொண்டு எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு சென்ற அன்புத் தெய்வமே!
உங்கள் பாசமிகு நினைவுகளை நினைத்து
தினம் தினம் துடித்துக் கலங்குகின்றோம்.
என்றும் நீங்கா நினைவுகளுடன்
மனமொடிந்து தரணியில் நாங்கள் வாழுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், துவாரகன் (மகன்),
சகோதரர்கள்.

*குப்பிளான்.* (16844)



## இரண்டாம் வருட நினைவலைகள்

மண்ணில் 1954 ~ 02 ~ 25



விண்ணில் 2001 ~ 05 ~ 07

செல்வி
### கந்தையா கோகுலராணி

எமது அன்புத் தெய்வமே மறைந்து இருவருடமானாலும்
உம் நினைவலைகள் இன்றும் ஓயவில்லை.
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மூளாய் றோட்,*
*வட்டுக்கோட்டை.*
(C-27436)
பிரிவால் துயருறும்:
சகோதரர்கள்.

# அட! அப்படியா!!

## இறுக்கம்! ஆபத்து!!



இன்றைய இளைஞர்கள், இளம் பெண்களின் விருப்பமான உடை 'ஜீன்ஸ்'. முரட்டுத்துணியான ஜீன்ஸ் துணிமூலம் தைக்கப்படும். ஜீன்ஸ்"களை இளைய தலைமுறையினர் விரும்பி அணிகிறார்கள். இடுப்பு மற்றும் கால் பகுதிகளை கவ்விப்பிடிக்கும் அளவுக்கு இறுக்கமாக ஜீன்ஸ் உடைகளை அணிவதை பலரும் விரும்புகின்றனர்.


இளம் பெண்கள் தங்கள் அழகை வெளிப்படுத்தும் விதமாக இறுக்கமான 'லோகிப் ஜீன்ஸ்' களை அதிகமாக அணிகின்றனர்.

இவ்வாறு இறுக்கமாக ஜீன்ஸ் அணிவது உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்று டாக்டர்கள் எச்சரித்துள்ளனர். கனடாவைச் சேர்ந்த டாக்டர் மால்வின்டர் பார்மர் என்பவர் இது தொடர்பாக ஆய்வுக்கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார்.

"இளம் பெண்கள் இறுக்கமான ஜீன்ஸ் உடை அணிவதால் இடுப்பு மற்றும் கால் பகுதிகளில் உள்ள உணர்ச்சி நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. இரத்த ஓட்டமும் தடைப்படுகிறது. இதன் காரணமாக முதுகுவலி, தொடை, கால் பகுதிகளில் வலி, வீக்கம் போன்றவை ஏற்படுகின்றன.


"சிறுநீரகக் கோளாறுகளும் எதிர்காலத்தில் வரும் ஆபத்தும் உள்ளது. இதுபோன்ற பிரச்சினைக்காக சில இளம்பெண்கள் சிகிச்சைபெற வந்த போதுதான் இறுக்கமான ஜீன்ஸ் உடை காரணமாக இந்த கோளாறு ஏற்பட்டது தெரியவந்தது. உடனே அவர்களுக்கு சில மருந்துகளை முதல் உதவிக்காகக் கொடுத்துவிட்டு தளர்வான உடையணியும்படி கூறினேன். அதன் பிறகு எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை" - என்று தனது ஆய்வுக் கட்டுரையில் டாக்டர் மால்வின்டர் குறிப்பிட்டுள்ளார். எனவே இறுக்கமான உடையணிவதில் உங்களுக்கும் ஆர்வமிருந்தால் இன்றே அதைக் கைவிட்டு விடுங்கள்.

## நாங்களும் தொழிலாளர்கள்தான்



இந்த குரங்குகள் இரண்டும் பொறுப்புள்ள குரங்குகள். தாய்லாந்தின் சம்போன் மாகாணத்தைச் சேர்ந்த இந்த இரண்டு குரங்குகளும் மரத்தில் ஏறி தேங்காய் பறித்து போட்டன. அந்த தேங்காய்களை வானில் ஏற்றியது இந்த குரங்குகள் தான். வான் புறப்பட்டதும் வானின் பின்னால் தொற்றிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தன. வானை செலுத்தத் தெரிந்திருந்தால் அதையும் இந்த குரங்குகளே செய்திருக்கும்.

## அதிசயமான உயிரினம்



அணுகுண்டு வெடிக்கும்போது ஏற்படும் கதிர்வீச்சு ஆபத்து நிறைந்ததாகும். கதிர்வீச்சால் பாதிக்கப்படுபவர்கள் உயிரிழக்கும் அபாயம் மற்றும் உடல் உறுப்புகள் சிதைந்துபோகும் ஆபத்து உள்ளது.

பாதுகாப்புக் கவசம், தகுந்த முன்னேற்பாடுகள் இல்லை என்றால் கதிர்வீச்சு அபாயத்திலிருந்து எந்த உயிரினமும் தப்பிக்கவே முடியாது. இது தொடர்பாக விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தியபோது ஒரு நுண்ணுயிர் மட்டும் கதிர்வீச்சையும் மீறிச் செயற்படுவது தெரியவந்தது. அதன் பெயர் டினோகாகஸ் ( Deinococcus).

சாதாரண உயிரினம் தாங்கும் அளவைவிட ஆயிரம் மடங்கு அதிகமான கதிர்வீச்சைச் செலுத்தியபோதும் இந்த உயிரினம் அதையும் தாங்கிக்கொண்டு சேதம் அடையாமல் பத்திரமாக இருந்தது. பொதுவாக அதிகமான கதிர்வீச்சுப் பாயும்போது எந்த நுண்ணுயிரும் அதைத் தாங்க முடியாமல் சிதைந்து உடைந்து பல பாகங்களாகச் சிதறும். ஆனால் டினோகாகஸ் நுண்ணுயிர் மட்டும் பாதிப்படையாமல் இருந்தது. கதிர்வீச்சின்போது இந்த நுண்ணுயிரின் டி.என்.ஏ.அமைப்பு ஒழுங்கற்றதாக மாறியபோதிலும் சிறிது நேரத்தில் அது பழைய நிலையை அடைந்துவிடுகிறது.

இந்த அபூர்வ உயிரின அமைப்புக் குறித்து இஸ்ரேலில் உள்ள 'வெயிஸ்மன் இன்ஸ்ட்டிடியூட்' விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினார்கள். விஞ்ஞானி சமாதார் லெவின் தலைமையில் நடந்த ஆய்வில் வியக்கத்தக்க தகவல்கள் வெளியானது.

அதாவது நுண்ணுயிரியான டினோகாகஸின் டி.என்.ஏ.(மரபுக்கூறு), அமைப்பு வட்டவடிவிலான சங்கிலித்தொடராக அமைந்துள்ளது. இந்த அமைப்புக் காரணமாகவே டினோகாகஸ் நுண்ணுயிர் கதிர்வீச்சைத் தாங்கி நிற்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கண்டுபிடிப்பு அணுகுண்டுகளில் இருந்து மனிதகுலம் தப்பிப் பிழைப்பதற்கான வழிவகைகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடும்.

## சார்ஸால் வந்தது



உலகையே உலுக்கிக்கொண்டிருக்கிறது சார்ஸ். விமான நிலையங்களில் கெடுபிடிகள் அதிகமாகி வருகின்றன. வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு சார்ஸ் நோய்க் காய்ச்சல் இருக்கிறதா என்பதைக் கண்டறிய தைவான் விமான நிலையத்தில் பயன்படுத்தப்படும் மின்னியல் தேமோமீற்றர்தான் இது.

தயாரிப்பு:
கனிமொழி

## உலகின் சிறிய டிஜிட்டல் கமரா



ஜப்பானின் பிரபல மினோல்டா நிறுவனம் புதிதாக உருவாக்கியுள்ள டிஜிட்டல் கமரா இது. 'டைமேஜ' என்ற இந்த கமராதான் உலகிலேயே மிகச் சிறிய, எடை குறைந்த கமரா. இதன் எடை 120கிராம். 20மி.மீ. அகலமும் 67மி.மீ.நீளமும் உள்ளது. விற்பனைக்கு வந்திருக்கும் இந்தக் கமராவின் விலை 420அமெரிக்க டொலர்.

# நீங்கள் அதிகம் பொய் பேசுபவரா?



நீங்கள் அதிகம் பொய் சொல்பவரா? அப்படியானால் உங்களுக்கு அபாயம் காத்திருக்கின்றது. இனி இதைப் படியுங்கள்.

பொய் சொல்வது என்பது கடினமான விஷயம். பலருக்கு அதுவே கைவந்த கலை. யாரிடம் பொய் சொல்லக்கூடாதோ, அவரது முகத்துக்கு நேரே பொய்களை அள்ளி வீசி ஒன்றுமே தெரியாதமாதிரி நடித்து 'வேஷம் போடும்' நபர்கள் பலர் உண்டு.

இவர்கள் தங்களது செயலை தமக்குத்தாமே பாராட்டிக்கொள்வதோடு தன்னைப்போல சாமர்த்தியசாலி யாரும் இல்லை என்று நினைத்துக்கொள்பவர்கள்.



இப்படிப் பொய் சொல்லிக் காலம் தள்ளும் நபர்களுக்கு மூளை தொடர்பான நோய்த் தாக்குதல்கள் ஏற்படுவதற்கான அபாயம் இருப்பதாக மருத்துவ ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

ஒருவர் தன் வாய் வார்த்தைகளால் பொய் சொன்னாலும் அதை அவர்களின் மூளை ஏற்றுக்கொள்வதில்லை. "ஐயோ! இந்தாள் இப்படி வாய் கூசாமல் பொய் சொல்கிறானே" என்று மூளைபதறும். பொய் சொல்வதால் மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றம் காரணமாக இரத்த ஓட்டம் அதிகமாகும்.

அமெரிக்காவின் பிலடெல்பியா மாகாணத்தில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழக டாக்டர் டானியல் என்பவர் தலைமையிலான குழு இது தொடர்பாக ஆய்வு நடத்தியது.

ஒருவன் பொய் சொல்கிறானா? இல்லையா? என்பதைக் கண்டுபிடிக்க 'லை டெக்டர்' (Lie Detector) என்ற கருவி உள்ளது. ஒருவர் உண்மையை மறைத்துப் பொய் சொல்லும்போது உடலில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டுபிடித்து இந்தக்கருவி பதிவு செய்யும்.

உதாரணமாக ஒருவர் பொய் சொல்லும்போது இருதயத் துடிப்பு அதிகரிக்கும். மார்பு படபடவென்று அடித்துக் கொள்ளும், வியர்வை அதிகமாகும், அமைதியாக உட்கார முடியாமல் நிலைகொள்ளாத தவிப்பு நிலவும்.

இதை எல்லாம் பொய் பேசுவதைக் கண்டுபிடிக்கும் கருவி காட்டிக்கொடுத்துவிடும். பொலிஸார் வழக்கு விசாரணையின்போது இந்தக்கருவியைப் பயன்படுத்தி ஒருவர் சொல்வது உண்மையா? பொய்யா? என்று கண்டுபிடிக்கும் வழக்கம் மேல்நாடுகளில் உண்டு.

இது தொடர்பாக டாக்டர் டானியல் தலைமையிலான குழு ஆய்வு செய்தபோது புதிய தகவல் ஒன்று வெளியானது. அதாவது, ஒருவர் தொடர்ந்து பொய்களைக் கூறி வரும் போது அதை அவரது மூளையால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. இதன் காரணமாக மூளை பாதிப்பு அபாயமும் ஏற்படும் என்று தெரியவந்துள்ளது.

ஒரு மனிதன் பொய் சொல்லும் போது அதை அவனது மூளை ஆராய்ந்து பார்க்கும். மூளையில் ஏற்கனவே பதிவாகி இருக்கும் உண்மைக்கும், இந்த மனிதன் கூறும் பொய்க்கும் உள்ள வித்தியாசத்தை மூளை உணர்ந்துகொள்ளும். உண்மைக்கு மாறான தகவலைக் கூறும்போது மூளையின் ஒரு பகுதியில் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளமுடிவதில்லை. இதனால் ஏற்படும் பாதிப்பைச் சரிக்கட்ட குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு அதிக இரத்தம்பாய்கிறது.

இதே நிலை (பொய் பேசும் நிலை) நீடிக்கும்போது மூளையின் குறிப்பிட்ட பகுதி மோசமாகப் பாதிக்கப்படுகிறது. ஞாபகசக்தி குறைதல், நரம்புத்தளர்ச்சி, பக்கவாதம் மற்றும் உடல் உறுப்புகளின் செயற்பாடுகள் குறைதல். முன்னுக்குப்பின் முரணாகப் பேசுதல் போன்ற பாதிப்புகள் என்று ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

எனவே, உடல் நலனைக் கருத் திற்கொண்டாவது பொய் சொல்வதைத் தவிர்த்து உண்மைகளையே பேசுங்கள். ★

## அப்படியானால் அபாயம் காத்திருக்கிறது!



யாழ். வண் - கிழக்கு - அத்தியடி

ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில்

## பூங்காவனத் திருவிழா

*அடியார் பெருமக்களே! இன்று (16. 04. 2003) புதன்கிழமை எம்பெருமானின் பூங்காவனத் திருவிழா நடைபெறும்.*

**மாலை 4.00 மணிக்கு**

வசந்தமண்டபப் பூஜை திருவூஞ்சல் நிகழ்வு
பூந்தோட்டத்தில் எம்பெருமான் வீதியுலா.

**மாலை 6.00 மணிக்கு**

பலவருடங்கள் குழுவினரின் மேளக்கச்சேரியுடன்
நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

**செல்வி வாசுகி ரங்கனின** *நியூ வீணாகானம் வழங்கும்*

**பல்லிய நிகழ்வு**

*கல்லைஞானமாமணி*

**சத்தியதாஸ்**

வில்லிசைக் குழுவினரின் *(சிறுப்பிட்டி)*

**வில்லிசையும் இடம்பெறும்.**

*குறிப்பு:*– சமய அறிவுப் போட்டியில் சித்தியடைந்தவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். அன்று அடியார்கள் அனைவரும் எம்பெருமானின் பூங்காவனத் திருவிழாவிற்கு வருகைதந்து எம்பெருமானின் அருளாசியைப் பெற்று உய்யும் வண்ணமும், அதனைத தொடர்ந்து நடைபெற இருக்கும் இசை நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணமும் கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளையார் பணியில்
(16822) அத்தியடி இந்து இளைஞர்கள்.

---

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச

## வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம்

**27-04-2003**

மேற்படி கூட்டம் 2003-04-27ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.30மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு.ச.முருகனேசன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தலும், பொதுச் சபைக் கூட்டப் பிரதிநிதிக்கான அதிகாரக் கடிதமும், கூட்ட நிகழ்ச்சி நிரலும், ஆண்டறிக்கை யாவும் தொடர்புள்ள அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தற்போது எம்முடன் தொடர்பு இல்லாத அங்கத்துவ சங்கங்கள் இவற்றைச் சமாசக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பதில் மாவட்டச் செயலாளர்,
யாழ்.மாவட்ட சி.க.கூ.
சங்கங்களின் சமாசம்.

*இல. 637, கே. கே. எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-27426)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இலட்சுமி அம்மா சிவயோகநாதன்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இலட்சுமி அம்மா சிவயோகநாதன் 14-04-2003 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-சேதுப்பிள்ளை தம்பதியினரின் மகளும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகளும் Dr.சிவயோகநாதனின் அன்பு மனைவியும் சியாமளா (ஆசிரியை, யா/கைதடி குருசாமி வித்தியாலயம்), சிவரூபி (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும் Dr.கமலசிங்கம் (மத்திய மருந்தகம், உடுப்பிட்டி), விசயதேவா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் கம்சானந்தி, நிலாந்தினி, விதூசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற கணக்காளர்), காலஞ்சென்றவர்களான இராசமணி, இராசரத்தினம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-04-2003) புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைககாக கைதடி வடக்கு ஊறல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும.

*கைதடி வடக்கு,* *தகவல்:*
*கைதடி.* (16815) சிவயோகநாதன் (கணவர்)

## அம்பலவாணர் முருகேசு

*(காரைநகர் - லொறி மணியம்)*

காரைநகர் அல்லின் வீதியைச் சேர்ந்த அம்பலவாணர் முருகேசு அவர்கள் 14.04.2003 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் சந்திரா(லண்டன்), இந்திரா(கனடா), குணரத்தினம்(குவைத்), மகேந்திரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராசா (லண்டன்), அப்பாப்பிள்ளை(கனடா), யோகேஸ்வரி, சுபத்திராதேவி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2003) வியாழக்கிழமை மு.ப.8.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*அல்லின் வீதி,* *தகவல்:*
*காரைநகர்.* (16824) மு.மகேந்திரன் (மகன்)

## கந்தையா கனகசபாபதி

*(ஓய்வுபெற்ற நில அளவையாளர் - ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவர்)*

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி காலமானார்.

அன்னார் ஞானலக்ஷ்மியின் அன்புக் கணவரும் உதயகுமாரன் (ஹொலண்ட்), வானதி(ஆங்கில விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறீதமயந்தியின்(ஹொலண்ட்) மாமனாரும் சாயிசிறி, துஷ்சாயி (ஹொலண்ட்) ஆகியோரின் பேரனும் குமாரசாமி, சிவபாக்கியம், திருநாவுக்கரசு, சந்திரசேகரம், விசாலாட்சி, திலவதி ஆகியோரின் சகோதரரும் சரஸ்வதி, நிகேஸ்வரி, உமாமகேஸ்வரி, ஞானேஸ்வரன், புவனேஸ்வரன், ஜெயாராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு கிழக்கு,* *தகவல்:*
*ஊரெழு.* (16821) மனைவி, பிள்ளைகள்.

---

உ
தேவி துணை

# தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்

## தரும பரிபாலன சபை

## Thumpalai Nellandai Amman Temple Board of Trustees

தும்பளை. / Thumpalai. — ஸ்தாபிதம் / ESTD } 31.05.1945 — பருத்தித்துறை / Point Pedro

பதிவு இல: / Regd No: } HA / 5 / JA / 419

(தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில். தும்பளை முருகன் கோவில், தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் ஆகிய மூன்று கோவில்களையும் பரிபாலனஞ் செய்யும் சபை)

| திரு.சி.வல்லிபுரம் | இ.கணேசநாதன் | திரு.சி.தங்கவடிவேலு |
|---|---|---|
| தலைவர்/President | செயலாளர்/Secretary | பொருளாளர்/Treasurer |

## அறிவித்தல்

**பருத்தித்துறை, தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்**

வெளிமடை (விளக்கு வைப்பு) - 25.04.2003 வெள்ளிக்கிழமை
வெளிமடை (வேள்வி பொங்கல்) - 02.05.2003 வெள்ளிக்கிழமை
நடைபெறும்.

மேற்படி ஆலய வீதியில் தற்காலிக கடைகள் அமைக்க விரும்புவோர் 30.04.2003 அன்று கோவில் முகாமையாளர் திரு. ஆ.நவரத்தினசாமி அவர்களுடன் தொடர்பு கொண்டு, தங்களுக்குரிய இடத்தினை ஒதுக்கிக்கொள்ளும்படி வேண்டப் படுகின்றனர்.

*Nellandai Amman Kovil* *நெல்லண்டை அம்மன் கோவில்,*
*Tharuma Paripalana Sabai.* (16818) *தரும பரிபாலன சபை.*

---

உ
தேவி துணை

# தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்

## தரும பரிபாலன சபை

## Thumpalai Nellandai Amman Temple Board of Trustees

தும்பளை. / Thumpalai. — ஸ்தாபிதம் / ESTD } 31.05.1945 — பருத்தித்துறை / Point Pedro

பதிவு இல: / Regd No: } HA / 5 / JA / 419

(தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில். தும்பளை முருகன் கோவில், தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் ஆகிய மூன்று கோவில்களையும் பரிபாலனஞ் செய்யும் சபை)

| திரு.சி.வல்லிபுரம் | இ.கணேசநாதன் | திரு.சி.தங்கவடிவேலு |
|---|---|---|
| தலைவர்/President | செயலாளர்/Secretary | பொருளாளர்/Treasurer |

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலன சபையின்**

**59 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்**

நிகழும் சுபானு வருடம் (2003) மே மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலயத்தின் திருஞானசம்பந்தர் மண்டபத்தில் சபையின் 59 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும் என்பதினை சகல மகாசபை அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

கோவிலுக்கு அன்பளிப்புச் செய்யவிரும்பும் அடியார்கள் பொருளாளர் திரு.சி.தங்கவடிவேலு அவர்களிடம் கொடுத்துப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

*தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்,* செயலாளர்
*தரும பரிபாலன சபை.* இ.கணேசநாதன்

---



ஊர்காவற்றுறை தம்பாட்டி - நுனிபுரம்

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## 10 ஆம் திருவிழா தீர்த்த உற்சவம்



இன்று (சித்திரைப் பௌர்ணமி) காலை 7.00 மணிக்கு சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மூலஸ்தானப் பூசையும் வசந்தமண்டபப் பூசையும் நடைபெறும். 10.00 மணிக்கு சமுத்திரத் தீர்த்தம் ஆட அம்பாள் புறப்படுவார். தீர்த்தமாடிய பின் பிராயச்சித்த அபிஷேகமும், 10 ஆம் திருவிழா சார்பாக அன்னதானமும் நடைபெறும். இரவு நிகழ்ச்சியாக 6.00 மணிக்கு மூலஸ்தான பூசையும், 7.00 மணிக்கு பஜனையும், 8.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து ஊஞ்சல் நிகழ்வும் நடைபெறும். அம்பாள் வீதியுலா வருவார் 11.00 மணிக்கு ஐங்கரன் இசைக்குழுவின் இன்னிசைக்கானம் இடம்பெறும்.

**அடியார்கள் அனைவரையும் வருகைதந்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.**

*நாரந்தனை வடக்கு,*
*தம்பாட்டி,* 10 ஆம் திருவிழா
*ஊர்காவற்றுறை.* (16810) உபயகாரர்கள்

# மானுடத்தின் தமிழ்க்கூடல் அடுத்து மட்டக்களப்பில்!

யாழ்ப்பாணம்,ஏப்.16

'மானுடத்தின் தமிழ்க்கூடலின் அடுத்த நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

திருகோணமலை, உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' II இன் இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு நிறைவுரை ஆற்றுகையிலேயே புதுவை இரத்தினதுரை இத்தகவலை வெளியிட்டார்.

கொழும்பிலும், புலம்பெயர்ந்த தமிழர்களுக்காக வெளிநாடு ஒன்றிலும் 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(ஒ-9)

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்.
"In Organic"
ஆரம்பம்:- 16-04-03 6.30 a.m.
Wed. 6.30 & Fri. 4-5 p.m.
"ORGANIC"
Mon., Fri. 5-6 p.m.
"Paper Class"
Mon.,Fri. 6-7p.m.
By: ANPALAGAN
(37068)

# பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

தென்மராட்சி,ஏப்.16

மீசாலை சித்திரவேலாயுதர் தேவஸ்தானத்தில் கடந்த புதுவருட தினத்தன்று தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான போர்த்தேங்காய் உடைத்தல், முட்டியுடைத்தல் உட்பட பல விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் பரிசில்களை வழங்கினார்.

(ஐ-117)

# கோவில் கட்டடத்துக்கு அடிக்கல்

வடமராட்சி,ஏப்.16

தும்பளை தெற்கு, நாவலடி சக்தி அம்மன் கோவில் புனராவர்த்தன கட்டடத்துக்கான அடிக்கல்லை சித்திர வருடப்பிறப்பன்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நட்டார்.

இக்கோவிலைக் கட்டி முடிப்பதற்கு அமைச்சர் மகேஸ்வரன் இரண்டு லட்சம் ரூபாவை அமைச்சு நிதியிலிருந்து வழங்கியுள்ளார். (ஐ-173)

# குளிக்கச்சென்றவர் நீரில் மூழ்கி மரணம்!

திருகோணமலைக் கடலில் குளிக்கச் சென்ற ஊர்காவற்றுறையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர், நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஓமானில் இருந்து வந்திருந்த இராமச்சந்திரன் சந்திரறூபன் (வயது 49) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

(ஐ-9)

சாவகச்சேரியில்
மீண்டும் புலமைப்பரிசில் வகுப்பு ஆரம்பம்
அநேக பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளோம்.
உங்கள் ஆசிரியர்
கபிலன்
ஆரம்பம்: 16.04.2003
புதன் பி.ப. 3.00 மணி
மேலதிக தொடர்புகளுக்கு:
சிவகணேசன் கல்வி நிலையம்
பெரியமாவடி வீதி,
சங்கத்தானை,
(C/27445) சாவகச்சேரி.

RAMCO CEMENT
ராம்கோ சிமெந்து
தற்பொழுது ராம்கோ சிமெந்து பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.
குறிப்பு:- முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
ஈஸ்வரபகவான் அன் கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T.P. : 021-2222350
(C/27441)

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி,
கந்தர்மடம்
A/L 2005 புதிய பிரிவு
Mon.,Fri. - 3 - 6 p.m.
சகல பாடங்களும் நடைபெறும்
CHE.,PHY.,BIO./MATHS
எனும் ஒழுங்கில்
★ வழமையான முன்னணி ஆசிரியர்கள்.
★ A/L 2003 மாணவர்கள் Dblock elements கருத்தரங்கு வெளியீட்டை பெற்றுக்கொள்ளலாம். (27444)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தாயின் மடியில்
19
௨
02
௨
1978



தாயக மண்ணில்
17
௨
03
௨
2003

### செல்வி சிவேஸ் சின்னப்பொடியன்

(தேசிய கல்வியியற் கல்லூரி - யாழ்ப்பாணம், நல்லூர் சயன்ஸ் அக்கடமி - பகுதிநேர ஆசிரியர்)

சிரிக்கின்ற நிலவே நீ பிறையல்ல பௌர்ணமி
மங்கல விளக்கே! உன் ஒளியின்றி எம்மனை இருளானதே!
உன்னோடு கற்றவர் உன் வாசல் வந்து புலம்புகிறார்
உன்னிடம் கற்றவரோ நின் வழிபார்த்து ஏங்குகிறார்
உன் ஒளியில் வழிபார்த்து நடந்த நாம் - இன்று
உன் ஒளியின்றி வழி தெரியாது திகைக்கின்றோம்
கண்ணே உன் கனிமுகம் காணாது
கடந்து போகின்ற எமது நாள்களை - உன்
நினைவுகளாய்ச் சுவாசித்து எம் கண்ணீரால்க்
கரைத்துக் கொண்டிருக்கின்றோம்.

எமது செல்வத்தின் மரணச் செய்தி கேட்டு பல வழிகளிலும் ஆறுதலும், உதவிகளும் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் இன்று (16.04.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிறுப்பிட்டி கிழக்கு,*
*நீர்வேலி.*
(16839)
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சுப்பையா சோமசுந்தரம்

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சோமசுந்தரம் நேற்று (15.04.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும் சிவபாலன், புஸ்பவள்ளி, ராஜேஸ்வரி (இந்தியா), நவநாதன், பரமேஸ்வரி, ஜெகதீஸ்வரி, ஜெயபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வமணி, செல்வநாயகம், ராஜேந்திரம் (இந்தியா), லிங்கேஸ்வரி, ரமணன், அமரர் ரவீந்திரர் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான பரமசாமி, சண்முகம், நடராஜா, பார்வதி மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.04.2003) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*118, கச்சேரி நல்லூர் றோட்,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(16849)
தகவல்:
சோ.நவநாதன்
(மகன்)

வீடு வாடகைக்கு
மருத்துவபீடத்திற்கு முன்பாக உள்ள 9/1, கோணாவளை ஒழுங்கையில் மூன்று அறைகளைக்கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (16842)
தொடர்பு:-
0777 732863

எமது புதிய வெளியீடு
சத்தியராஜ் நடித்த
சேனாி
வீடியோ சிந்து
உரும்பிராய்ச் சந்தி. உரும்பிராய்.
(C/27437)

நியூ மற்ஸ் அக்கடமி
மீசாலை
2003 ஆம் ஆண்டுக்கான
O/L Day Class
இன்று (16.04.2003)
புதன் காலை 8மணிக்கு
ஆரம்பமாகின்றது.
எமது முன்னணி ஆசிரியர் குழு
கணிதம்:- K.V.மதனா
விஞ்ஞானம்:- K.காண்டீபன்.
தமிழ் } சமயம் } S.நாகேஸ்வரன்
சமூகக்கல்வி:- T.ஜெபசுதன்
வர்த்தகம்:- S.செந்தூரன்
★ அனுமதிகள் வரையறை ★
(16807) - நிர்வாகி.

# மரண அறிவித்தல்கள்

## இராமச்சந்திரன் சந்திரறூபன்

பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக்கொண்ட இராமச்சந்திரன் சந்திரறூபன் அவர்கள் 14.04.2003 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ச.கலாவதி (லண்டன்) அவர்களின் அன்புக் கணவரும் கமல்ராஜ் (லண்டன்), சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் (அதிபர்) - யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற அதிபர்) தம்பதிகளின் அன்பு மகனும் வ.நடராசா (ஓய்வுபெற்ற தொலைத் தொடர்பு அலுவலர்) - அருந்ததிஅம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெ.சந்திரமாலா (புங்.நயி.பல நோ.கூ.சங்கம்), ஸ்ரீ சந்திரவதனி, இ.சந்திர கிருஷ்னன், க.சந்திரபாலிகை, இ.சந்திரகோபன் (மக்கள் வங்கி), சந்திர பாமா (இலங்கை மின்சாரசபை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயராசா (பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை பல நோ.கூ.சங்கம்), ஸ்ரீதரன், கஜேந்திரன், புஸ்பராசா (வீதி அதிகாரசபை), ஆனந்தராசா (ஊ.பல நோ.கூ.சங்கம்), பிறேமராசா (லண்டன்), மதனராசா (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணம்), நவனீதராசா (பிரான்ஸ்), கு.கலைமதி, ந.புஸ்பதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பு.மதுராவதி, அ.றோகினிஅம்மா, பி.சூரியகலா (லண்டன்), ம.மரியறோஸ், ந.கௌரி, கிருஷ்னகிரிநாதன், நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் சந்திரராஜா, தனுசியா, சக்திதாசன், அச்சுதன், பிரகலாதன், முகுந்தராசா, சஞ்சீவராசா, சுஜீவராசா, அஜந்தா, யதுவரன், ஹரிவர்மன், அர்வின், டிசானா, தூபிகா, விதூஜினி, யூஜினி, பிறேமானந், மையூரன், சசிகரன், அர்வினா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.04.2003) வியாழக்கிழமை 41/21, செம்மணி வீதி, நல்லூர் இல்லத்திலிருந்து இறுதிக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு மு.ப. 10.30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*41/21, செம்மணி வீதி,*
*நல்லூர்.*
(16835)
தகவல்:
ந.ஜெயராசா
(பொதுமுகாமையாளர் - ஊர்காவற்றுறை பல நோ.கூ.சங்கம்)

## திருமதி இரத்தினம் செல்லத்துரை

நேற்றுமுன்தினம் (14.04.2003) திங்கட்கிழமை காலமாகிய அப்பிளானை, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த திருமதி இரத்தினம் செல்லத்துரை அவர்களின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.04.2003)செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் செ.செல்லத்துரையின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி (கனடா), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் நித்தியானந்தன் (கனடா), சுகுமார் (ஆசிரியர், கோப்பாய் ம.வி.) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற அன்னமுத்து மற்றும் செல்லத்துரை (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்), காலஞ்சென்ற சிவக்கொழுந்து, நவமணி மற்றும் சுப்பிரமணியம் (இளைப்பாறிய மக்கள் வங்கி அதிகாரி), நல்லையா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிருஷா (கனடா), டினுஷ் (கனடா), நிறோஜ்குமார், தரண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று கோப்பாய் இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அப்பிளானை,*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.* *(16846)*
தகவல்:
செ.செல்லத்துரை
(கணவர்)

## சேதுபதி பொன்னம்பலம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் புலோலியில் வசித்தவருமான சேதுபதி பொன்னம்பலம் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேதுபதி - சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம், கமலநாயகம் ஆகியோரின் அன்பு மருமகனும் மீனாட்சிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் மனோகரன் கமலாதேவி, சாரதாதேவி ஆகியோரின் பாசமிகு பிதாவும் மோகனா, பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கஸ்தூரி (கனடா), கஜேந்திரன், கணேஸ்வரன், சஞ்சுதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் சோமசுந்தரம், விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.04.2003) வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கிரியைகளின் பின் காலை 10 மணிக்கு தகனத்திற்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*31/1, அல்பிரட் பிளேஸ்*
*கொழும்பு - 03.*
*T.P.: 576391.*
*(C/27431)*
தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

## திருமதி மேரி றோசலின் சாமிநாதன்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான திருமதி மேரி றோசலின் சாமிநாதன் (றாணி) கடந்த திங்கட்கிழமை 14.04.2003 வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை - மேரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்புறோஸ் சாமிநாதனின் அன்பு மனைவியும் அன்ரனற் ஷிறாணியின் அன்புத் தாயாரும் பிரான்சிஸ் ஜெறியின் அன்பு மாமியாரும் எவலீனா சர்மிலி, பிறிசில்லா தர்மிலி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான யேசுதாசன், மரியதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருட்சகோதரி காமலீற்றாவின் (தி.கு) பாசமிகு மச்சாளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சமயபுரம் வவுனியாவில் இருந்து இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 3.30 மணிக்கு, இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*C/O டேவிட் மரக்காரம்பளை றோட்,*
*சமயபுரம், வவுனியா. T.P: 024 24083* (16840)
தகவல்:
ஷிறாணி - ஜெறி
(மகள் - மருமகன்)

## அவசர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் செ.பத்மநாதன், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் என்.சிவபாதசுந்தரம் முபீன் ஆகியோரும் -

புலிகள் தரப்புப் பிரதிநிதிகளான யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோரும் -

நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அரசு - விடுதலைப் புலிகள் - அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஆகிய முத்தரப்புக்கள், கடந்த ஜனவரி மாதம் கூட்டாக மேற்கொண்ட குடாநாட்டின் தேவைகள் குறித்த ஆய்வு அறிக்கை தொடர்பாகவும் -

'சிரான்' அமைப்பினால் யாழ். மாவட்டத் துணைக்குழுவுக்கு அனுப்பப் பட்ட திட்டங்கள் தொடர்பாகவும் - முதலில் ஆராயப்பட்டன.

அதன்பின்னர் புதிய திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கல்வி, சுகாதாரம், கால்நடை, சூழல் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி, போக்குவரத்து, விவசாயம், மீன்பிடி, மீள்குடியமர்வு, சமூகசேவை ஆகிய பத்துத்துறைகளில் இனங்காணப்பட்ட 65 திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த 65 திட்டங்களில் 45 திட்டங்களை துணைக்குழு ஏற்றுக் கொண்டது. அவற்றை 'சிரான்' கூட்டத்தில் சமர்ப்பிக்க இணக்கம் காணப்பட்டது.

எஞ்சிய 20 திட்டங்களில் 4 திட்டங்கள் வேறு நிதிநிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படுவதால், 'சிரான்' திட்டத்தில் அவற்றைச் சேர்ப்பதில்லை என்றும் -

எஞ்சிய 16 திட்டங்களில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளதால் அடுத்த கூட்டத்தில் அவை பற்றி ஆராய்வது என்றும் -

முடிவுசெய்யப்பட்டது.

பாடசாலைகளைப் புனரமைத்தல, 13 பிரதேச செயலர் பிரிவுகளில் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ப.நோ.கூ.சங்கங்களைப் புனரமைத்தல், கிராம அபிவிருத்தி நிலையங்களை நவீன முறையில் அமைத்தல் போன்ற திட்டங்களே அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

உடனடித் திட்டங்களாக தீவுப் பகுதியில் நிலவும் குடி தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண 4 பவுஸர்களைக் கொள்வனவு செய்யும் திட்டமும் நெடுந்தீவு மாவிலித் துறையைப் புனரமைத்து நவீன மயப்படுத்தும் திட்டமும் துணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்திட்டங்களை நடைமுறைப்படுத்த 107 கோடி 30 லட்சம் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-3-5)

## கைதடி சிறுவர் இல்லத்துக்கு

# இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கு கலந்துரையாடல்

கைதடி சைவச்சிறுவர் இல்லத்தை மீள இயக்குவதற்கு வசதியாக இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல் நாளை சாவகச்சேரி நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு சங்க அங்கத்தவர்களுடன் சமுகமளிக்கும்படி இந்துசமயப் பேரவையின் தலைவர் அருட்கவி விநாசித்தம்பிக்கு சாவகச்சேரி நீதிவான் நேற்று அழைப்பு அனுப்பியுள்ளார்.

இந்த இடைக்கால நிர்வாகத்தில் இந்துசமயப் பேரவை உறுப்பினர்களுடன் சாவகச்சேரி நீதிமன்ற பதிவாளரும் அங்கம் வகிப்பார்.

இல்லத்தில் தங்கியுள்ள சிறுவர்களின் பெற்றோர் கள் சாவகச்சேரி நீதிவானை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். (ஐ-3)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்காததால் புலிகள் எங்கள் மீது கோபமாக இருப்பார்கள். அத்துடன் அவர்கள் கவலையடைந்திருப்பதும் எமக்குத் தெரியும்.

அதற்கான விளக்கத்தை அளிக்க நான் விரும்புகின்றேன்.

அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களில் ஒன்றாக 1997ஆம் ஆண்டுமுதல் விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவிக்கப் பட்டுள்ளது. புலிகளின் தற்போதைய நடவடிக்கைகளில் அமெரிக்கா அதிக அக்கறை கொண்டுள்ளது.

புலிகள் இயக்கம் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டிருப்பதால் அந்த இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் அமெரிக்காவில் நுழையமுடியாது. அவர்களுக்கான கடவுச் சீட்டுக்களை இந்த நிலையில் அமெரிக்காவால் வழங்கமுடியாது.

இதனால்தான், இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு நாங்கள் புலிகளை அழைக்கவில்லை. புலிகள் மீதான தடையை நாங்கள் நீக்க வேண்டுமென்றால் அவர்கள் பயங்கரவாத நடவடிக்கையில் இருந்து முழுமையாக விலகி வரவேண்டும்.

போரைக் கைவிட்டு அமைதிப் பாதைக்கு புலிகள் திரும்பியிருந்தாலும், அவர்கள் பயங்கரவாதத்தை முழுமையாகக் கைவிடவேண்டும். அப்போதுதான் புலிகள் மீதான தடையை நாங்கள் நீக்கமுடியும்.

பயங்கரவாத அமைப்பு என்ற தடையை நீக்க முக்கியமான காரணத்தை அமெரிக்கா இதுவரை காணவில்லை. இது குறித்த எமது நிலைப்பாடு தெளிவானது.

அமைதிப் பேச்சுக்கள் முன்னேற்றத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாலும் புலிகளும் இலங்கை அரசும் இன்னும் பல தடைகளைக் கடக்க வேண்டியுள்ளது.

இலங்கைப் பேச்சு வெற்றியடைய முக்கிய சக்தியாக அமெரிக்கா விளங்கும். சமாதானத்தின்மீது இலங்கை அரசும் புலிகளும் கொண்டுள்ள விட்டுக்கொடுப்பில்தான் அதன் வெற்றி தங்கியுள்ளது. அண்மைக்காலமாக புலிகளின் நடவடிக்கைகளை அமெரிக்கா ஊக்குவிக்கிறது - என்று அவர் தெரிவித்தார்.

### மொறகொட

இங்கு உரையாற்றிய அமைச்சர் மிலிந்தமொறகொட, தற்போதைய அரசின் சமாதானப் பேச்சு அணுகுமுறை வித்தியாசமானது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு பூரண விருப்பம் கொண்டுள்ளது - என்று கூறினார்.

### விடார் ஹெல்கிஸன்

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் கூறுகையில், 'இலங்கையில் சமாதானததை ஏற்படுத்த இதுவரை 30 லட்சம் டொலர்களை செலவு செய்துள்ளோம்' என்று கூறினார். (ஐ-3)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டார். அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ் இக்கூட்டத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றினார்.

சமாதானம் - ஒற்றுமை, அபிவிருத்தி என்ற தொனிப் பொருளில் அமைச்சர் மொறகொட பிரதான உரையாற்றினார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து நோர்வே வெளிவிகார அமைச்சர் ஹெல்கிசன் விளக்கிக் கூறினார்.

இலங்கைக்கான ஜப்பான் விசேட தூதுவர் யகூசி அகாஷி எதிர்வரும் ஜுன் மாதம் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் குறித்த தகவல்களைத் தெரிவித்தார்.

## உளவுப் பிரிவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்டார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் மூன்று நபர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் வைத்து நேற்று நண்பகல் கைது செய்யப்பட்டனர். சூட்டுச் சம்பவத்தில உயிர்தப்பிய உளவுத்துறை உறுப்பினரே இவர்கள் மூவரையும் கைது செய்தார் என்று கூறப்படுகிறது. கைதானோர் நீதிபதி ஏ.எல்.ஏ.கபூர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். மூவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

கைதானவர்களில் ஒருவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஆவார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த போராளி ஒருவரை பராமரிக்கும் பணியில் அவர் ஈடுபட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஏனைய இருவரும் சதாரண பொதுமக்கள் ஆவர். (ஐ-3)

## பெரும் அவமதிப்பாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவூப் ஹக்கீம் நேற்று மூதூர் சென்றார்.

அது பற்றி அவர் கூறியதாவது:-

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலின் பின்பு பிரதமரின் விசேட வேண்டுகோளின் பெயரில்தான் நான் இங்கு புறப்பட்டு வந்தேன்.

பொலீஸ் மா அதிபர், இராணுவ அதிகாரிகளுடன் நான் வந்தேன். அமைச்சர்களான அஸ்வர், காதர் ஆகிய இருவரும் கண்டியில் இருந்து இங்கு வந்து சேர்ந்தார்கள். மூதூர் அக்கரைச்சேனை பெரிய பள்ளி வாசலில் நாங்கள் ஒரு கலந்துரையாடலை நடத்தினோம். பொது மக்கள் பலரும் அதில் கலந்துகொண்டார்கள். சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில் எல்லா முஸ்லிம் அமைச்சர்களும் பதவி துறக்க வேண்டும் என்று சில [illegible]த்துத் தெரிவித்தார்கள்.

மஹ்ரூப் எம்.பி. பேசுகையில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்தான் இதற்கெல்லாம் பொறுப்பு. அவர் தான் பதில் கூற வேண்டும் என்றார் அவர். அவர் அவ்வளவோடு நின்றுவிடவில்லை. இங்கு வந்திருக்கின்ற இரண்டு ஐ.தே.க. அமைச்சர்களும் பதவிகளை ராஜினாமாச் செய்யத் தேவையில்லை. அமைச்சர் ஹக்கீம் தான் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மக்கள் ஆவேசப்பட்டு, ஆத்திரப்பட்டு அவர் மீது எகிறிப் பாய்ந்தார்கள். அப்போது சற்றுக் கொந்தளிப்பாக இருந்தது. இழுபறிகளும் நடந்தன. கட்சி ஆதரவாளர்கள் என்னைச சூழ்ந்து கொண்டு, "இவ்வாறு தொடர்ந்து உங்களை அவமானப் படுத்துகிறார்களே - அவமதிக்கிறார்களே, நீங்கள் இன்னும் சகித்துக் கொண்டு இருக்கிறீர்களா? பொறுத்தது போதும் நீங்கள் எங்களோடு தங்கியிருக்க வேண்டும். அமைச்சுப் பதவியை இராஜினமாச் செய்வது பற்றிப் பேசினார்களே; அது தொடர்பாகப் பிரதமர் இங்கே வந்து உங்களோடு சமாதானம் பேசினால் ஒழிய, நீங்கள் இங்கிருந்து போகக் கூடாது என்று வேண்டிக்கொண்டார்கள்; அன்புக் கட்டளையிட்டார்கள்.

"நான் மக்களின் பிரதிநிதி. அவர்களுடைய அன்பு வேண்டுகோளை என்னால் நிராகரிக்க முடியாது. அவர்களுடைய கட்டளையை மீற முடியாது.

"அமைச்சர்கள் தயாரத்ன, ராஜித சேனாரத்ன போன்றவர்கள் அம்பாறைக்கு வந்து கட்சியின் தலைமைத்துவத்தை அவமதித்த போதும் நாங்கள் மிகவும் சகிப்புத் தன்மையுடன் மிகமிகப் பொறுமையுடன் நடந்து கொண்டோம். இனிமேலும் இவ்வாறான அவமானங்களைச் சகிப்பது பொருத்தமல்ல என்பதாலும் இது கட்சியினுடைய தன்மானத்துக்கும் சுயகௌரவத்துக்கும் மாறான ஒரு விடயம் என்ற காரணத்தினாலும்தான நான் இப்படி ஒரு தீர்க்மான முடிவை எடுத்திருக்கிறேன். பிரதமர் இங்கே வந்து சமாதானம் கூறியே ஆகவேண்டும்.

"நுவரெலியாவில் தங்கியிருக்கும் பிரதமருடன் பேசினேன். அவர் அமைச்சர்கள் குழு ஒன்றை என்னிடம் அனுப்புவதாகக் கூறினார். மக்களின் கட்டளை வேறுவிதமாக இருக்கும் போது, பிரதமர் கூறியதற்கு நான் எப்படி உடன்படமுடியும்?

"நமக்கு கட்சி உண்டு. தலைமைத்துவம் உண்டு. அரசியல் பாதை உண்டு. அரசியல் பிரச்சினைகளைத தீர்ப்பதற்கு இந்தப் பாதையை விட்டு விலகமாட்டோம். அரசையும் விட்டு விலகமாட்டோம். ஆயினும், மக்களுக்குச் சேவை செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் பதவிகளைத் தூக்கி எறியத் தயங்க மாட்டோம்.

"முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தை ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூதூரில் வைத்து அவமதித்ததை அடுத்து ஏற்பட்டுள்ள சூழ்நிலை தொடர்பாக ஆராய்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் மூதூருக்கு அழைத்திருக்கின்றேன்.

"இந்தமண் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமானது என்று விடுதலைப் புலிகளே தெரிவித்திருக்கின்றனர். எனவே, எமது மண்ணில் இருந்து - களத்தில் மக்களுடன் இருந்து எமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவுள்ளோம்.

- இவ்வாறு அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

*(முன்னர் வந்த செய்தி 2 ஆம் பக்கத்தில்)*

(ஐ-3)


கீன் சென்ரர்
திருநெல்வேலி.
O/L DAY CLASS
ஆரம்பம்:
16.04.2003
இன்று காலை 9 மணி
(16812)

ஐடியல்
சண்டிலிப்பாய்.
O/L DAY CLASS
ஆரம்பம்:
16.04.2003
இன்று காலை 8 மணி
(16811)

Seminar on water Proofing Products & Concrete / Masonary Repair Products
Date: Saturday 26th April 2003,
Sponsored by
FINCO Ltd & ICC Ltd
In Collaboration with
CHAMBER OF COMMERCE & INDUSTRY OF YARLPANAM
Interested Engineers, Contractors and Institutions involved in Reconstruction works are requested to register with Chamber of Commerce & Industries Yarlpanam. *At No. 17, Chemmany Road, Nallur, Jaffna.* (near Kittu park) on or before April 21st 2003
Secretary
Chamber of Commerce & Industry of Yarlpanam
Phone: 0777 - 164966
(C/27430)

BARATHY
சித்தன்கேணி
O/L DAY CLASS
புதிய பிரிவு - ஆரம்பமாகி நடைபெறுகின்றது
எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர்குழுவினால்
விஞ்ஞானம் - தேவா
கணிதம் - S.சிவரூபன்
தமிழ் - குகபரன், தமிழ்மாறன்
சமூகக்கல்வி - சுதன், கிரிதரன்
ஆங்கிலம் - விஜயபாஸ்கர், திலகர்
சமயம் - தரன்
வர்த்தகம் - லோகேஸ்வரன்
இப்பிரதேச பாடசாலைகளில் O/L பரீட்சைகளில் அதிஉயர்ந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை இந்நாளில் வாழ்த்தி இதுபோன்று நீங்களும் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறுகளை பெற்றிட இப்புதிய பிரிவில் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும். (C/27415)

முக்கிய அறிவித்தல்
இலங்கையின் மிக முன்னணி இணைந்த கணித ஆசிரியர்
திரு. குணசிங்கம்
A/L 2004 யாழ்.மாணவர் நலன்கருதி உடனடியாக ஆரம்பிக்கவிருக்கும் அலகுகள்
1. நிகழ்தகவு
2. சார்புவேகம்
★ நேரஅட்டவணை நிறுவனத்தில்
NEW SCIENCE CENTRE
யாழ்நகர்.
(27440)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சத்தியராஜின்
சேனா
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(16347)

புதிய வீடியோ CD வெளியீடு
சத்தியராஜின்
சேனா
(இன்று பிரதிகள் பெறலாம்)
சிலம்பரசன் நடித்த
தம்
(திரையரங்குகளுக்கு முன்னுரிமை)
விஷ்ணு வீடியோ
கோண்டாவில்.
வடமராட்சி வாடிக்கையாளர்கள் சோலை வீடியோ பிரதான வீதி நெல்லியடியில் பெற்றுக்கொள்ளலாம்.
(C/27427)

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
A/L 2005
பொருளியல்
ஆரம்பம்: 18.04.2003 மாலை 4 மணி
யாழ்நகர் முன்னிலை ஆசிரியர்
வரதராஜன்
✻ அனுமதிகள் முன்கூட்டியே பெறவேண்டும்.
✻ தனிப்பாடம் எடுக்கலாம்.
(C/27438)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம், 37, 3ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகக்கொண்ட சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் சமாதான நீதிவானுமாகிய

### அமரர் பசுபதிப்பிள்ளை கதிரவேலு

அவர்களின் திடீர்மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்புள்ளம் கொண்ட அன்னாரது ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

37, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி மனோகரன் (மேகலா)

(C/27421)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.